180

15-8-57

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



செய்திகள்

பூ-பௌதிக வருஷம்

பூ-பௌதிகம் என்றால் பூமி பற்றிய விஞ்ஞானம் என்று பொருள். வானிலை, சமுத்திரம், பூகம்பம் முதலியனவும் பூமியின் இதர சூழ்நிலைகளையும் ஆராய்ந்து அறிவதே பூமி பற்றிய விஞ்ஞானம்.

முதல் முதலாக உலக விஞ்ஞானிகள் ஒன்று சேர்ந்து ஆர்ட்டிக் துருவப் பிரதேசம் பற்றி 1882-83-ஆம் ஆண்டில் ஆராய்ச்சி செய்தார்கள். அந்த ஆராய்ச்சியின் வெள்ளி விழா 1932-33-ஆம் ஆண்டில் நடைபெற்றபோது வெளி மண்டல ஆராய்ச்சியையும் சேர்த்துக் கொண்டார்கள்.

இப்போது ஜூலை மாதம் இந்தப் பூ-பௌதிக ஆராய்ச்சி மூன்றும் முறையாக நடைபெற்றது. முன்பு இந்த ஆராய்ச்சியை, 'துருவ வருஷம்' என்று குறிப்பிட்டார்கள். இப்போது இதை, 'சர்வதேச பூ பௌதிக வருஷம்' என்று குறிப்பிடுகிறார்கள்.

வளரும் எழுத்தாளர் சங்கம்

திருச்சியில் ஜூலை மாதம் வளரும் எழுத்தாளர் சங்கத்தின் துவக்க விழா தேவர் ஹாலில் நடைபெற்றது. 'உமா' ஆசிரியர் திரு. உமாபதி அவர்கள் தலைமை வகித்தார். கண்ணன் ஆசிரியர் விழாவைத் துவக்கி வைத்தார். காலையில் எழுத்தாளர்களின் கூட்டம் நடைபெற்றபோது வெளியூர்களிலிருந்து வந்திருந்த எழுத்தாளர்களும் கலந்து கொண்டார்கள். விழாவில் திருச்சி எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு. ரெட்டியார், காரியதரிசி திரு. அகிலன், செயற்குழு உறுப்பினர் திரு. சுகி, திரு. ஸ்ரீரங்கம் நரசிம்மன், சிவாஜி ஆசிரியர் திரு. திருலோக சீதாராம் ஆகியோர் கலந்துகொண்டு, வளரும் எழுத்தாளர் சங்கத்தை வாழ்த்திச் சிறப்புரை வழங்கினார்கள். திருச்சியிலுள்ள வளரும் எழுத்தாளர்கள் மிகச் சிறப்பாக விழாவை நடத்தியதுபோலவே சங்கத்தையும் சீரிய முறையில் நடத்தி வளர்ப்பார்கள் என்று நம்புகிறோம். விழாவின்போது அழகான மலர் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டிருந்தார்கள். அவர்கள் அறிவித்திருந்தபடி பரிசு பெற்ற எழுத்தாளர்களின் கதை, கட்டுரை கவிதை முதலியவற்றை அவர்கள் ஏன் வெளியிடவில்லையோ, தெரியவில்லை. பரிசு பெற்றவர்களுக்கு, பாராட்டுப் பத்திரங்கள் மட்டுமே வழங்கப்பெற்றன. பரிசுகளைத் தபாலில் அனுப்பிவைப்பார்கள் என்று நம்புகிறோம். சம்பந்தப்பட்ட அனைவரும் விழாவைத் திறம்பட நடத்தியதைப் பாராட்டுகிறோம்.

ஆண்டு விழா

ஐயனாவரம் ரெயில்வே கோச் பாக்டரி ஆரம்பப் பாடசாலையின் ஆண்டு விழா சென்னை கலெக்டர் திரு. தாயப்ப தேவர் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பாடசாலையின் மானேஜர் திரு. எஸ். ஜி. ஐயர் ஆண்டறிக்கையை வாசித்தார். கோச் பாக்டரி தலைமை நிர்வாக அதிகாரி திரு. கே. சடகோபன் அவர்கள் பள்ளியின் வளர்ச்சியைப் பாராட்டிப் பேசினார். பரிசளிப்பு வைபவமும் பள்ளி மாணவர் கதம்ப நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற்றன,

சுதந்தரப் போர் நூற்றாண்டு விழா

சென்னை, தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் சுதந்தரப் போர் நூற்றாண்டு விழாவையொட்டி, நாடக அரங்கமும் பல கேளிக்கை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நூற்றாண்டுப் போரை விளக்கும் சினிமாப் படக் காட்சி ஒன்றும் திறந்த வெளி அரங்கில் இலவசமாகக் காட்டப் போகிறார்கள்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 16

15-8-'57

குழந்தைகளே! பக்கம் 2
கடற் புலி .. 3
துப்பறியும் மோகன் .. 5
இளவரசன் சிலை .. 13
கடமை தீர்ந்தது .. 17
கவியரங்கம் .. 20
ஹா! .. 21
நீங்களும் நானும் .. 25
அட ஈசுவரா! .. 28
பேச்சாளனாக வேண்டுமா? 29
ஒலி பரப்பும் பெட்டி .. 36
உருண்டு விழுந்தது .. 37
தலை தப்பியது .. 40

அட்டைப் படம்:
போட்டோ N. ராமகிருஷ்ணா

செய்திகள் - 2-ஆம் அட்டை
பேனா நண்பர்கள் - 3-ஆம் அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/25

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

உளவு அறிந்தவர்!

லோகமான்ய பாலகங்காதர திலகர், 'சுதந்தரம் எங்கள் பிறப்புரிமை' என்று முழக்கிய பெரும் தீரர். நாட்டின் விடுதலையே தம் மூச்சாக வாழ்ந்தவர். சிறந்த மேதை. சிறையிலே கீதைக்கு உரை எழுதியவர். அவருடைய பேச்சையும் எழுத்தையும் கண்டு இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் நடுங்கியது. அவருடைய நடவடிக்கைகளை உளவறிவதற்காக ஒரு ரகசியப் போலீஸ்காரனை அவரிடம் போய் வேலைக்கு அமரச் செய்தார்கள். அவன் போய் அவரிடம் மெதுவாகச் சமையல்காரனாக வேலைக்கு அமர்ந்தான்.

ஐந்து ஆறு மாதங்கள் சென்றன. பிறகு ஒரு நாள் அந்தச் சமையல்காரன் திலகரிடம் வந்து, "சுவாமி, என் சம்பளத்தைக் கொஞ்சம் உயர்த்துங்கள், எனக்குப் போதவில்லை" என்று கேட்டுக்கொண்டான்.

பாலகங்காதரர் இதைக் கேட்டுவிட்டு மெல்லச் சிரித்தார். "என்னப்பா இது, சம்பளம் போதவில்லை என்கிறாய். உனக்கு நான் ஆறு ரூபாய் தருகிறேன். சர்க்கார் வேறு உனக்கு இருபத்தி நாலு ரூபாய் மாதச் சம்பளம் தருகிறார்கள். இரண்டும் சேர்த்து முப்பது ரூபாய் ஆகிறது. இது உனக்குப் போதவில்லையா என்ன?" என்றார். இந்த உண்மை பாலகங்காதரருக்குத் தெரிந்துவிட்டது என்று கண்ட அந்த உளவாளி அப்புறம் ஏன் அங்கே நிற்கிறான்?

குழந்தைகளே!

நாடெங்கும் சுதந்தர விழா நடைபெறும் மகிழ்ச்சிகரமான நாள் இது. 1947-ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதிதான் நம் நாடு அந்நிய ஆட்சியிலிருந்து விடுபட்டு, சுதந்தரம் பெற்றது.

இந்த வருஷம் நாம் சுதந்தரம் பெற்ற பத்தாவது வருஷமாகும். இந்த விழாவுக்கு மற்றொரு விசேஷமான கௌரவமும் பெருமையும் உண்டு. முதல் சுதந்தரப் போரின் நூற்றாண்டு விழாவாகவும் இது விளங்குவதுதான் காரணம்.

முதல் சுதந்தரப் போர் 1857-இல் நடைபெற்றது. இதை ஆங்கிலேயர்கள் வெறும் சிப்பாய்க் கலகம் என்று வர்ணித்துச் சரித்திரம் எழுதினார்கள். ஆனால் அது இந்த நாட்டின் முதல் சுதந்தரப் போர் என்பதை அனைவருமே அறிவார்கள்.

அந்நிய நாட்டினர் பலர் நம் நாட்டுக்கு வியாபாரத்துக்காக வந்தனர். வந்தவர்கள் உள்நாட்டுச் சண்டைகளில் பங்குகொண்டு நாடாளும் எண்ணம் கொண்டனர். அதற்கான சூழ்ச்சிகளிலும் இறங்கினார்கள்.

1757-ஆம் ஆண்டில் பிளாஸியில் போர் நடைபெற்றது. அந்தப் போரினால் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஊன்றியது. இதை 1857-இல் நூற்றாண்டு விழாவாக ஆங்கிலேயர்கள் கொண்டாடினார்கள்.

ஆனால் இந்திய தேசபக்தர்கள் சுதந்தர தாகம் கொண்டு அந்த நூற்றாண்டு விழாவை வேறு விதமாகக் கொண்டாட எண்ணினார்கள். பிளாஸி யுத்தத்தினால்தான் இந்தியா அடிமைப்பட்டது. நூறு ஆண்டுகளுக்குப் பிறகு அதே நாளில் நம் நாட்டை அடிமைத் தளையிலிருந்து மீட்டுச் சுதந்தரம் பெற உறுதி பூண்டு வீறுகொண்டு எழுந்தார்கள்.

ஹிந்துக்கள் புனிதமான கங்கை நீரையும் முஸ்லிம்கள் புனிதமான குரானையும் வைத்துக்கொண்டு இந்த நாட்டு விடுதலைக்காகப் போராடி வெற்றி பெறுவது அல்லது உயிர் நீப்பது என்று சபதம் செய்தார்கள்.

நானா சாகேப், மௌல்வி அகமது ஷா, ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய், ராணா குமார்சிங், தாதியா டோபே, நக்ஹி கான் போன்ற வீரத் தலைவர்கள் ஆங்கிலேயர்களைப் பல இடங்களில் புறமுதுகிட்டு ஓடும்படிப் போரிட்டனர்.

அந்தச் சுதந்தரப் போரில் முதல் முதலாகத் தூக்குமேடையில் தம் உயிரைத் தியாகம் செய்யும் பெருமை மங்கள பாண்டே என்ற அந்தண இளைஞருக்குக் கிடைத்தது. புரட்சி இயக்கத்தில் சம்பந்தப்பட்ட தலைவர்களின் பெயர்களைக் கூறினால் விடுதலை என்று ஆசை காட்டினார்கள். அதை மறுத்து அவர் தூக்கிலேறினார்.

ஆயினும் சில சுயநலமிகளும் கோழைகளும் இந்த நாட்டில் இருந்தார்கள். அந்நியர்களுக்கு அவர்கள் தம் சகோதரர்களையே காட்டிக் கொடுத்தார்கள். சிந்தியா, டெஹ்ரி மன்னர்கள், ராஜா மான்சிங் போன்ற மீர்ஜாபர்களால் ஆங்கிலேயர் அந்தப் புரட்சி இயக்கத்தை அரும்பாடுபட்டு அடக்கினார்கள். எனினும் அந்தப் பெரும் தேசபக்தர்கள் காட்டிய தீரமும் வீரமும் புரிந்த சாகஸங்களும் தியாகங்களும் நமக்கு வீர உணர்ச்சியையும் தேசபக்தியையும் ஊட்டி வருகின்றன என்பதில் என்ன சந்தேகம்?

இன்று அந்தச் சுதந்தரப் போரின் நூற்றாண்டு விழாவை சுதந்தர இந்தியாவில் நாம் வெற்றி விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடுவோம். தம் சிறந்த வாழ்வை உயர்ந்த லட்சியத்துக்காகத் தியாகம் செய்த அந்த முன்னோர்களுக்கு அஞ்சலி செய்வோம். பெற்ற சுதந்தரத்தைப் பேணி வளர்த்து, பாரதத்தைப் பாரினில் உயர்த்த உறுதி பூணுவோம். ஜய் ஹிந்த்!

—ஆசிரியர்.

கதை:

கடற் புலி

சித்திரம்: ஸாமி

அரசர் கட்டுண்ட நிலையில் எல்லாவற்றையும் கவனிக்க, கொள்ளைக்காரர்கள் ஆணுடையில் இருக்கும் அரசகுமாரியை இழுத்துச் செல்வதோடு பொன்னையும் மணியையும் வாரிச் செல்கிறார்கள்.
படகில் மற்றவர்களோடு ஏறி அமர்ந்த தலைவன். . . .
இனி அவர்கள் கலத்தைப் போக விடுங்கள்!
தலைவ! கீழ் வானம் கறுத்து விட்டது, கடல் கொந்தளிக்கும் போல் தோன்றுகிறது. புயல் சின்னங்கள் புலப்படுகின்றன!
கொள்ளைத்தலைவன் கடற்புலி வானத்தை நிமிர்ந்து பார்த்துவிட்டுச் சிரிக்கிறான்.
வாழ்க்கையே ஒரு கடல் தானே! புயல் வீசும்; அலைகள் மலைபோல் புரளும்; ஆயினும் கவலை யில்லை!
பிறகு எளியாரை வலியார் வாட்டினால் வலியாரைத் தெய்வம் வாட்டும்!
இளவரசி பேசி முடிக்குமுன் ஆலங்கட்டி மழையும் அதைத் தொடர்ந்து பெரும் காற்றும் அடிக்கத் தொடங்குகின்றன.
ஹஹ்ஹஹ்ஹா! வீரன் வேதாந்தம் பேசுகிறான்! கடல் சீறினும், புயல் சீறினும் கலத்தைச் செலுத்துங்கள்!

(தொடரும்).

துப்பறியும் மோகன்

தே. பார்த்தசாரதி

மோகனுக்குத் 'திக்'கென்றது. எவ்வளவு நேரமாக இந்தச் செவிடன் இந்த அறையில் ஓசைப்படாமல் நின்றுகொண்டிருக்கிறானே! மோகனின் மனத்தில் பலவித எண்ண அலைகள் குமிழிட்டன.

செவிடன் பேசினான். ''என்ன தம்பி, யோசனை செய்துகொண்டிருக்கிறாய்? முதலில் இந்த ஆகாரத்தைச் சாப்பிடு'' என்று அவன் சொல்லிவிட்டு ஆகாரத் தட்டைக் கீழே வைத்தான்.

மோகன், ''நீ தட்டை வைத்துவிட்டுப் போ. நான் அப்புறம் சாப்பிடுகிறேன்'' என்றான் உரக்க.

''ஏன், நான் வெளியே போனால் அடுத்த அறையில் உள்ள பெண்ணுடன் சேர்ந்து வெளியே எப்படித் தப்பி ஓடலாம் என்று பார்க்கவா? உம், முதலில் இதைச் சாப்பிடு. ஆகட்டும்'' என்றான் செவிடன்.

மோகனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அப்படியானால் தான் இத்தனை நேரம் பேசியதெல்லாம் அவன் காதில் விழுந்துவிட்டதா?

மோகன் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது செவிடன், ''தம்பி, போயும் போயும் இவர்களிடம் மாட்டிக்கொண்டாயே! காளிமுத்து எமகாதகனாயிற்றே!'' என்றான். மோகன் வருத்தப்படுவதுபோல் முகத்தை வைத்துக்கொண்டு, ''என்ன செய்வது? தெரியாத்தனமாக வந்து மாட்டிக்கொண்டுவிட்டேன்!'' என்றான்.

செவிடன் அவனுக்கு அருகில் வந்து உட்கார்ந்துகொண்டான். ''தம்பி, பல ஆண்டுகளாக என் மனத்தில் புதைந்து கிடந்த சில ரகசியங்களை இப்போது உன்னிடம் சொல்லப்போகிறேன். உன்னைப் பார்த்ததும் ஏதோ ஒரு வித அன்பும் பாசமும் என்னை ஊக்குகின்றன. நீ எப்படியாவது இவர்களிடமிருந்து தப்பி ஓடி, இவர்களைப் போலீசில் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என் ஆசையும். அப்போதுதான் எனக்கும் விடிவு காலம் பிறக்கும்'' என்றான்.

மோகன் வியப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டான். செவிடன் தொடர்ந்து கூறினான். ''இவர்கள் மகா பாதகர்கள். நான் உன்னைப்போல் ஒரு சிறுவனாயிருந்தபோதுதான் என்னை இவர்கள் ஒரு திருவிழாக் கூட்டத்தில் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார்கள். என் வீட்டில் நான் மிகவும் செல்லமாக வளர்ந்தேன். இவர்கள் என்னைத் தூக்கிக்கொண்டு வந்து, இவர்கள் சொல்வதுபோல் செய்யாவிட்டால் என்னைக் கொன்று விடுவதாகப் பயமுறுத்தினார்கள். அன்று முதல் பல வருஷங்களாக நான் இந்தத் திருடர்களுக்

குச் சேவை செய்துவருகிறேன். நல்ல வேலையாக என்னை வெளியே திருட அனுப்புவதில்லை. காரணம், நான் செவிடன்போல் நடித்தது தான். நான் உண்மையிலேயே செவிடன் என்றுதான் அவர்கள் நினைத்துக்கொண் டிருக்கிறார்கள். அதனால் என்னை வெளியே திருட அனுப்பாமல், வீட்டிலேயே தங்களுக்குச் சமையற்காரனாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் திரும்பி எப்போது என் பெற்றோரைக் காணப் போகிறேனோ, தெரியாது.''

இதைச் சொல்லி முடிக்கும் போது அவன் கண்களில் நீர் துளித்தது. மோகனுக்கு அவன்பால் நன்றியுணர்ச்சி ஏற்பட்டது. ''ஐயா, தாங்கள் என்னிடம் இவ்வளவு அன்புடன் நடந்துகொள்வது எனக்குத் தங்களிடம் மதிப்பை உண்டாக்குகிறது. ஆனால், நான் இப்போது தப்பிச் செல்ல வேண்டுமே! அதுவல்லவா முக்கியம்?'' என்றான்.

அவன், ''தம்பி, அது அவ்வளவு சுலபமான காரியம் இல்லையே! அந்தப் பயல்கள் இரண்டு பேரும் வெளிக் கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்களே! இன்னும் சற்று நேரத்தில் அவர்கள் திரும்பி வந்து விடுவார்கள். வந்தாலும், பங்களாவின் சாவி எப்பொழுதும் அவர்கள் இடுப்பில்தான் இருக்கும். என்ன செய்வது?'' என்றான்.

மோகன், ''ஐயா, எப்படியாவது முயற்சி செய்து எங்களை விடுவிக்க வேண்டும்'' என்றான்.

அவன் சற்று நேரம் யோசித்தான். பிறகு மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டிவிட்டு, ''தம்பி, ஒரு நல்ல யோசனை இருக்கிறது. நான் எப்படியாது அவர்களிடமிருந்து சாவியை எடுத்து உன்னை விடுதலை செய்கிறேன். அது என்ன யோசனை என்று இப்போது கேட்காதே..சரி, அவர்கள் வரும் நேரமாகிவிட்டது. நான் கதவைப் பூட்டிக்கொண்டு வெளியேறுகிறேன்'' என்று கூறிவிட்டுத் தட்டை எடுத்துக்கொண்டு நகர்ந்தான். வெளியே அறைக் கதவு பூட்டப்படும் சப்தம் கேட்டது.

மோகன் உற்சாகத்துடன் எழுந்தான். ஜன்னல் வழியே லீலாவை அழைத்தான். நடந்ததையெல்லாம் கூறினான்.

* * *

''அடே செவிட்டுப் பயலே!'' என்று உரக்க அழைத்தான் காளி. அவனும் அவன் நண்பனும் அப்போதுதான் திரும்பியிருந்தார்கள்.

செவிடன் வந்தான். ''இரண்டு பேருக்கும் நல்ல காபி போட்டுக் கொண்டு வாடா'' என்று காளி உத்தரவிட்டான். 'செவிடன்' தலையை அசைத்துவிட்டு நகர்ந்தான்.

''அண்ணே, இன்னிக்கு ரெண்டு பேருக்கும் ஒரே அலைச்சல். இல்லே? ஹாய்யாகத் தூங்கலாம் போல் இருக்கிறது'' என்றான் சோமு.

''ஆமாம், சோமு. எனக்கும் அப்படித்தான் இருக்கிறது. காபி வரட்டும். சாப்பிட்டுவிட்டுத் தூங்கலாம்'' என்றான் காளி.

நேரமாகிக்கொண் டிருந்தது. ''காபி கொண்டுவர இத்தனை நாழியா?'' என்று காளி கத்தினான். ''இதோ கொண்டு வந்துட்டேங்க!'' என்று 'செவிடன்' ஒரு தட்டில் இரண்டு டம்ளர்களில் காபியைக் கொண்டுவந்து வைத்தான். காளிமுத்துவும் சோமுவும் சில நிமிஷங்களில் காபியைக் குடித்தார்கள். உடனே அவர்கள் கண்கள் செருகின. அப்படியே படுத்துக் கொண்டு விட்டார்கள்..

* * *

பூட்டு திறக்கப்படும் சப்தம் கேட்டது. அடுத்து, கதவு திறந்து கொண்டது. ஓர் உருவம் மெள்ள உள்ளே எட்டிப் பார்த்தது. ''உம், தம்பி. கிளம்பு சீக்கிரம்!'' என்று ரகசியக் குரலில் உத்தரவிட்டது.

மோகன் கவனித்தான். அந்தச் செவிடன்தான் அது!

''எங்கே? வெளியே ஓடலாமா? அவர்கள் இருவரும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?'' என்று மோகன் மெள்ளக் கேட்டான்.

''அவர்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறார்கள். வெளிக் கதவு சாவி

என்னிடம் இருக்கிறது. நீ ஓடு. போ. உம்..''

''அவர்கள் விழித்துக்கொண்டு விட்டால்..?''

''அவர்கள் இப்போது விழித்துக் கொள்ள மாட்டார்கள். அதை நான் பார்த்துக்கொள்கிறேன். மயக்க மருந்து இப்போதுதான் உள்ளே போயிருக்கிறது..சீக்கிரம்..''

மோகன் தயாரானான். 'விறு விறு'வென்று வெளியே வந்தான். செவிடனும் ஓசைப்படாமல் பின்னால் நடந்தான். சில நிமிஷங்களில் அவர்கள் மாடிப்படி இறங்கி வாசற்படியில் வந்து நின்றார்கள். அங்கே சற்று நிதானித்துச் சுற்றுமுற்றும் பார்த்தான் செவிடன். பிறகு தன் இடுப்பிலிருந்து ஒரு சாவியை எடுத்துப் பூட்டைத் திறந்தான்.

''உம். தம்பி, ஓடு. நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் விஷயத்தைச் சொல். உன்னை நம்பித்தான் இவ்வளவு தூரம் செய்கிறேன். இதே பாதையில் நேராக ஓடினால் குறுக்காக நெடுஞ் சாலை ஒன்று வரும். அதில் போனால் ஊர் எல்லையை அடையலாம்..நீ தப்பி ஓடிவிட்டது தெரிந்தால் இருவரும் என்னை லேசில் விடமாட்டார்கள்.''

மோகன் விடை பெற்றுக் கொண்டு ஓடினான். நெடுஞ் சாலையை அடைந்தவுடன் நல்ல வேளையாக ஒரு 'லாரி' வந்தது. அதை நிறுத்தி, அதில் ஏறிக்கொண்டான் மோகன். ஊருக்குள் வந்ததும் அதிலிருந்து இறங்கி நேரே சிவசாமியின் வீட்டுக்கு ஓடினான். அவனுக்கு மேலும் கீழும் மூச்சு வாங்கியது.

மோகன் தன் பார்வையிலிருந்து மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, செவிடன் வெளிக் கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே விரைந்தான். சாவியைப் பழையபடியே காளிமுத்துவின் இடுப்பில் செருகிவிட வேண்டும் என்று விரைந்தான். அப்போது தான் மோகன் இருந்த அறையைப் பூட்டாமல் வந்துவிட்டோம் என்பது அவன் நினைவுக்கு வந்தது. நேரே அந்த அறையை நோக்கிச் சென்றான்.

அந்த அறைக்குள் சோமு கண்களைக் கசக்கியபடி உட்கார்ந்திருந்தான்! செவிடனைப் பார்த்ததும் அவனை ஒரு சிரிப்புடன் வரவேற்றான்!

செவிடனுக்கு ஏற்பட்ட திகைப்பில் அவன் கையிலிருந்து சாவி நழுவிக் கீழே விழுந்தது!

12. திருடர்கள் திகைத்தனர்!

ஸி. ஐ. டி. சிவசாமி, மோகனை உற்சாகமாக வரவேற்றான். ''நீ எப்படியும் வந்து சேர்ந்துவிடுவாய் என்று எனக்குத் தெரியும்..நீ வந்திருக்கும் வேகத்தைப் பார்த்தால் எனக்கு நீ ஏதேதோ புதிய விஷயங்கள் சொல்லப்போகிறாய் என்று தோன்றுகிறதே!'' என்றான்.

மோகன் நேரத்தை வீணாக்காமல் 'மள மள' வென்று நடந்த எல்லா விவரங்களையும் கூறினான்.

''ஆல் ரைட்!....இப்போது அந்தத் திருடர்கள் அனைவரையும் கையும் களவுமாகப் பிடிக்கவேண்டும் என்றுதானே சொல்கிறாய்?'' என்று சிவசாமி கேட்டான். மோகனின் பதிலைக்கூட எதிர் பார்க்காமல், உடனே ஒரு குறிப்பிட்ட நம்பரை 'டயல்' செய்து, போனில் பேசினான்.

''ஹலோ!....அங்கே யார் பேசுவது? திவான்பகதூர் தினகரத்தினம்தானே?..உங்கள் நண்பர் ராவ் சாகிப் சுந்தரத்தையும் அழைத்துக்கொண்டு இங்கே வாரும்..ஆமாம்..அட, அதெல்லாம் ஒண்ணும் இப்போ என்னைக் கேட்காதேயும்....என்ன, நான் சொன்னபடி செய்கிறீரா!..நான் காத்திருப்பேன்!''

அடுத்தாற்போல் இன்னொரு நம்பரை 'டயல்' செய்து, பேசினான் சிவசாமி.

''மிஸ்டர் சாரங்கபாணி!..... என்ன, சுகமான தூக்கம் போலேயிருக்கு. நீர் கொட்டாவி விடுவது போனில் கேட்கிறதே!....என்ன விசேஷம் என்று கேட்கிறீரா? பெரிய விசேஷம். நீர் உடனே நாலைந்து கான்ஸ்டபிள்களை

அழைத்துக்கொண்டு 'போலீஸ் ஜீப்'பில் பறந்து வரவேண்டியது. புரிந்ததா?..ஆமாம், அவசரம் என்று தான் சொல்கிறேனே: காபியை அப்புறம் சாப்பிட்டுக் கொள்ளலாம். முதலில் நான் சொன்னபடி செய்யும். ஜல்தி!''

அடுத்த பத்து நிமிஷங்களில் அங்கு ஒருவித பரபரப்பு ஏற்பட்டது. ராவ் சாகிப்பும் திவான் பகதூரும் ஒரு காரில் வந்து இறங்கினார்கள். அவர்களைத் தொடர்ந்து சொல்லி வைத்தாற்போல் ஒரு போலீஸ் ஜீப் வந்து நின்றது.

சிவசாமி அனைவருக்கும் விஷயத்தைச் சுருக்கமாகக் கூறினான். அவற்றை யெல்லாம் கேட்கக் கேட்க, இன்ஸ்பெக்டர் சாரங்கபாணிக்கு ஒரே வியப்பு ஏற்பட்டது. 'இவ்வளவு சிறிய பையனா இந்தத் தீரச் செயல்களைச் செய்திருக்கிறான்!' என்று எண்ணி ஆச்சரியப்பட்டார். தாங்கள் இழந்த பொருளெல்லாம் தங்களுக்கு மீண்டும் கிடைக்கப் போகிறது என்று நினைத்துப் பார்த்தபோது தினகரத்தினத்துக்கும் சுந்தரத்துக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டது. மோகனை நன்றியோடு பார்த்தனர்.

''உம்.....இனிமேல் ஒரு கணமும் தாமதிக்க நேரமில்லை. அவர்களைப் பிடிக்க வழி செய்ய வேண்டும்: அவர்களுக்கு இந்நேரம் விஷயம் தெரிந்திருக்கும். மோகன் தப்பிப் போலீசுக்குத் தகவல் கொடுத்திருப்பான் என்று அவர்கள் உணர்ந்திருப்பார்கள். ஆகவே, தப்பி ஓடப் பார்ப்பார்கள்!'' என்றான் சிவசாமி.

''முதலில் நாம் அந்த இடிந்த பங்களாவுக்குப் போவோம். எனக்கு அது இருக்குமிடம் நன்றாகத் தெரியும். நான் வழி காட்டுகிறேன்'' என்றான் மோகன்.

சிவசாமி கொஞ்ச நேரம் யோசனை செய்தான். பிறகு, ''வேண்டாம். முதலில் நாம் அனைவரும் அந்தக் காட்டுக்குப் போவோம். பிறகு அங்கிருந்து திருடர்களின் பங்களாவுக்குப் போவோம்'' என்று கூறினான்.

அடுத்த கணம் போலீஸ் ஜீப்பில் சாரங்கபாணி, சிவசாமி, மோகன் ஆகியோரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் அமர்ந்தனர். திவான் பகதூரின் காரில் தினகரத்தினமும் சுந்தரமும் இரண்டு கான்ஸ்டபிள்களும் உட்கார்ந்தனர்.

மோகன் வழிகாட்ட, ஜீப் அந்தக் காட்டை நோக்கிப் பறந்தது.

* * *

சோமு கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். எதிரே செவிடன் நின்றுகொண்டிருந்தான். ''எங்கேடா போயிட்டு வறே?'' என்று அவனைப் பார்த்து உரத்த குரலில் கேட்டான்.

செவிடன் ஒரு நிமிஷம் திடுக்கிட்டு விட்டான். 'கையும் களவுமாக அகப்பட்டுக்கொண்டு விட்டோமே, இப்போது என்ன பதில் சொல்வது?' என்று திணறினான்:

''என்னடா, ஆடு திருடின கள்ளன் மாதிரி விழிக்கிறே?.... உண்மையைச் சொல். இங்கே இருந்த அந்தப் பையன் எங்கேடா?''

''எ....எனக்குத் தெரியா

துங்க'' என்று நடுங்கிய குரலில் அவன் பதில் கூறினான்.

''ஏ, என்னடா கதை அளக்கறே?..அப்படியானால் வாசல் கதவு சாவி உன் கைக்கு எப்படி வந்தது?'' என்று கேட்டுக் கொண்டு, கீழே கிடந்த அந்தச் சாவியை எடுத்தான் சோமு.

இந்தச் சத்தத்தில் காளிமுத்துவும் தூக்க மயக்கம் தெளிந்து எழுந்துவிட்டான். கண்களைக் கசக்கிக்கொண்டு முணுமுணுத்தபடியே எழுந்து சோமுவும் செவிடனும் இருந்த இடத்துக்கு வந்தான்.

அவனைப் பார்த்ததும் சோமு துள்ளிக் குதித்தான். ''அண்ணே, அண்ணே..இந்தச் செவிட்டுப் பயலைப் பாத்தியா? நாம் தூங்கிக் கொண்டிருக்கும்போது நம்மிடமிருந்து வாசல் சாவியைத் திருடிக் கதவைத் திறந்து அந்தப் பொடிப் பயலை வெளியே விட்டுவிட்டு வந்திருக்கிறான். நல்ல வேளையா தூக்கம் தெளிஞ்சு எழுந்து இவன் என்ன செய்கிறான் என்று பார்க்க, நான் இந்தப் பக்கம் வந்தால் இந்த அறைக் கதவு திறந்து கிடந்திச்சு. நான் இப்படியே உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, இந்தச் செவிட்டுப் பயலும் ருஷியா வர்றான். இந்தத் தடியனை நம்பாதேன்னு அடிச்சிக்கிட்டேனே, கேட்டியா நீ?'' என்று அலறினான்.

காளிக்கு மயக்கம் தெளிந்து முந்தைய நாள் சம்பவங்கள் நினைவு வரச் சில நிமிஷங்களே பிடித்தன. அவன் முகம் திடீரென்று விகாரமாக மாறியது. கண்கள் மிளகாய்ப் பழம்போல் சிவப்பேறின. பல்லை 'நற நற' வென்று கடித்தபடி, ''டேய், உண்மையா உள்ளது உள்ளபடியே இங்கே நடந்ததையெல்லாம் சொல். உம், சீக்கிரம்'' என்று ஒரு குத்து விட்டான்.

செவிடனால் ஒன்றும் அசைந்து கொடுக்கக்கூட முடியவில்லை. ''ஐயோ, எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க. நானே இப்பத்தான் தூக்கம் தெளிஞ்சு எழுந்து வந்தேன். வந்து பார்த்தப்போ இவரு



கையில் சாவியுடன் நின்னுகிட்டிருந்தாரு. அறைக் கதவும் திறந்து கிடந்தது. நீங்க வந்ததைப் பார்த்ததும் என் மேலே பழி சுமத்தருரு'' என்று ஒரே போடு போட்டான்.

இதைக் கேட்டு இருவருமே ஒரு நிமிஷம் அயர்ந்து போய்விட்டார்கள். காளிமுத்துவுக்குக்கூட சோமுவின் பேரில் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. சோமுவுக்கே செவிடனின் வார்த்தைகள் 'ஷாக்' அடித்தாற்போல் இருந்தன.

எல்லாம் ஒரு கணம்தான். சோமு சமாளித்துக்கொண்டு, ''ஐயோ, அண்ணே: என்னமா புளுகருன்? ஐயோ, ஐயோ, அம்மாடி....'' என்று இழுத்தபடியே அங்கே உட்கார்ந்தான்.

ஆனால் காளிமுத்துவின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. ''டேய் சோமு, சிக்கிரம் போய்க் கயிறு எடுத்துக்கொண்டு வா'' என்ருன். சோமு அப்படியே நன்ருக முறுக்கேற்றப்பட்ட ஒரு நீண்ட கயிற்றை எடுத்துக்கொண்டு வந்தான். அந்தக் கயிற்றைச் செவிடனைச் சுற்றிப்போட்டு முறுக்கித் தரதரவென்று இழுத்துக்கொண்டு போனுன் காளிமுத்து. முன்பு மோகன் அடைபட்டிருந்த அறையில் ஒரு மூலையில் அவனைக் கொண்டு போய்த் தள்ளி, நன்ருகக் கட்டிப்போட்டான். ''அந்தப் பயலை விடுதலை செய்தாயே! இப்போ அவனுக்குப் பதிலாக நீ இங்கே கிட. சோறு, தண்ணி, ஆகாரம் ஒண்ணுமில்லாமல் அணு அணுவாகச் செத்துப் போ'' என்று சாபமிட்டுவிட்டு, அறைக் கதவை 'மடா'ரென்று கோபத்துடன் சாத்திப் பூட்டினுன். சாவியை எடுத்துக்கொண்டான்.

சோமு அவனிடம் வந்து நடுங்கிக்கொண்டே, ''இ..இ.. இப்போ என்ன அண்ணே செய்கிறது?..தப்பிப் போனவன் போய்ப் போலீசில் சொல்லிவிடுவானே!..அதற்குள் நாம் தப்பி ஓ..ஓடியாகணுமே! என்ருன். அவன் கை, கால்கள் எல்லாம் 'வெலவெல'வென்று உதறின.

''டேய் சோமு, அதெல்லாம் நான் திட்டமிட்டுவிட்டேன். அந்தப் பெண் பூட்டப்பட்டிருக்கும் அறைச் சாவியும் செவிடன் கட்டப்பட்டிருக்கும் அறைச் சாவியும் என்னிடம் இருக்கின்றன. நாம் இருவரும் இப்போது நம் அறைக்குள் போய் நம்முடைய பொருள்களையெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு, நேரே காட்டுக்குப் போவோம். அங்கே அடையாளமாகக் கல் வைத்திருக்கிருேமே, அதை நகர்த்தி அதன் அடியில் இருக்கும் நகைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு ரத்தினத்துடன் ஓடிவிடுவோம். சில நாள் தலைமறைவாக இருந்துவிட்டுப் பிறகு கப்பலேறி விடுவோம்'' என்று யோசனை கூறினுன் காளி.

''அதுதான் சரி'' என்று சோமுவும் ஆமோதித்தான். உடனே இருவரும் தம் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு தங்களுடைய பொருள்களையெல்லாம் சேகரித்து மூட்டை கட்டினர். வெகு விரைவில் தங்கள் காரியத்தை முடித்துக்கொண்டு, அறைக் கதவைத் திறந்து வெளிப்பட்டனர். அவ்வளவுதான்; அப்படியே திகைத்து நின்றுவிட்டார்கள் இருவரும்.

அவர்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து சி. ஐ. டி. சிவசாமியும் இரண்டு மூன்று கான்ஸ்டபிள்களும் காத்திருந்தனர்.

''என்ன, மூட்டை கட்ட இவ்வளவு நேரமா ஆகும்?..ஒரு ஐந்து நிமிஷம் முன்னுடி முடிந்திருந்தால் எங்களைப் 'பேட்டி' காண வேண்டியிருக்காதே!..போய்க் கப்பலேறியிருக்கலாமே!..''

இப்படிச் சொல்லிவிட்டு, சிவசாமி ஒரு கையினுல் அலட்சியமாக இரண்டு பேரையும் நெட்டித் தள்ளினுன். இதைச் சற்றும் எதிர்பார்க்காத அவர்கள் 'குபுக்'கென்று பத்தடி தூரம் பின்னுல் போய் ஒருவர் மேல் ஒருவராக விழுந்தார்கள். அவர்கள் மூட்டை இன்னெரு பக்கத்தில் விழுந்தது.

சோமுவுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது.எந்தத் துப்பறிபவனைப் பற்றிச் சதா காலமும் மனத்தில் நினைத்

துப் பயந்துகொண் டிருந்தானே, அவனையே நேருக்கு நேர் பார்த்து விடவே என்ன பேசுகிறோம் என்று தெரியாமலே, ''டேய், எமப்பயல் வந்துட்டாண்டோய்!'' என்று உளறியடித்துக்கொண்டு எழுந்தான்.

சிவசாமி ஒரு கான்ஸ்டபிளை நோக்கி, ''கண்ணுச்சாமி, அந்த மூட்டையைப் பத்திரமாக எடுத்துக் கொண்டுபோய் 'ஜீப்'பில் வை. அதில் ஒன்றும் பிரமாதமாக இருக்காது. மூக்குக்கண்ணாடி, பாண்ட், ஷர்ட் முதலிய 'மேக்கப்' சாமான்கள்தான் இருக்கும்'' என்றான். கான்ஸ்டபிள் அகன்றான்.

இதற்குள் அந்த இருவரும் சமாளித்துக்கொண்டு எழுந்துவிட்டார்கள். ''ஏய்..ஏய், பசியோடு படுத்திருக்கும் புலியின் குகைக்குள் நுழைந்தால் என்ன ஆகும், தெரியும் அல்லவா?'' என்று காளி, சிவசாமியைப் பார்த்துக் கர்ஜித்தான்.

''அதெல்லாம் அப்புறம் தெரிந்துகொள்ளலாம். வேண்டிய அவகாசம் இருக்கிறது. எங்கே முதலில் நீ வைத்திருக்கும் சாவிகளை எடுத்து எல்லா அறைக் கதவுகளையும் திறந்துவிடு. புலியின் குகைக்குள் என்னைத் தவிர இன்னும் யார் யார் இருக்கிறார்கள் என்று பார்ப்போம்'' என்றான் சிவசாமி.

13. விறுவிறுப்பான சம்பவங்கள்

சப்-இன்ஸ்பெக்டர் சாரங்கபாணி தலையைச் சொறிந்துகொண்டார்.

சிவசாமி, ''நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் உயிரைவிட டிரைவருக்குத் தன் உயிரின்மேல் அதிக ஆசை உண்டு. உங்களுக்கு எந்த ஆபத்தும் நேராது. ஆனால் கார் இந்த வேகத்தில்தான் போயாக வேண்டும்'' என்றான்.

சாரங்கபாணி மீண்டும் தலையைச் சொறிந்துகொண்டு, ''இப்போ நாம் காட்டுக்குப் போய் என்ன செய்வது?'' என்று கேட்டார். ''சற்றுப் பொறுத்திருங்கள். அங்கே போனதும் தானாகவே உங்களுக்கு விளங்கும்'' என்று சிவசாமி சமாதானமாகக் கூறினான்.

மோகன் காளிமுத்துவும் சோமுவும் பணத்தையும் நகைகளையும் புதைத்து வைத்திருந்த இடத்தை நன்றாக மனத்தில் நினைவு வைத்துக்கொண்டிருந்தானாகையால், அதற்குச் சற்றுத் தூரத்தில் ஜீப்பையும் காரையும் நிறுத்திவிட்டு அனைவரும் இறங்கினார்கள். முன்பு மோகன் பார்த்தபோது காளிமுத்து ஒரு கல்லை அடையாளத்துக்காக நிறுத்தி வைத்திருந்தானே, அந்தக் கல் அந்த இடத்திலேயே இருந்தது. மேலே என்ன செய்வது என்று சாரங்கபாணி யோசிப்பதற்குள், சிவசாமி உத்தரவு கொடுத்தான்.

''இந்தக் கல்லைத் தூக்கி எடுத்து வேறு இடத்தில் வை'' என்று அவன் கூறியதும் இரண்டு போலீஸ்காரர்கள் மிகவும் முயன்று அந்தக் கல்லைப் பெயர்த்தார்கள்.

அப்போது அருகே சில இலைகள் அசையும் சப்தம் கேட்டது. மற்றவர்களைவிடச் சிவசாமிக்கு அச்சப்தம் மிகவும் தெளிவாகக் கேட்டது. இதையே எதிர்பார்க்கிறவன் போல் சிவசாமி 'சடக்'கென்று தன் பார்வையைக் கூர்மையாகச் செலுத்தினான்.

செடிகளுக்கு நடுவே யாரோ ஓடுவதைக் கவனித்தான் சிவசாமி. சற்று நேரம் அந்தத் திக்கிலேயே தன் பார்வையை நிதானித்துவிட்டுத் திருப்தியுடன் தலையை ஆட்டினான்.

இதற்குள் அந்தப் போலீஸ்காரர்கள் இருவரும் பெரு முயற்சி செய்து கல்லைப் புரட்டித் தள்ளிக் கொண்டேபோய் வேறு இடத்தில் நட்டார்கள்.

சிவசாமி சொன்னான்: ''இப்போது நான் மோகனுடன் இரண்டு கான்ஸ்டபிள்களைத் துணைக்கு அழைத்துக்கொண்டு அந்தப் 'பங்களா'வுக்குப் போகிறேன். மிஸ்டர் சாரங்கபாணி, மீதியுள்ளவர்களுடன் வெவ்வேறு மரத்தடியில் பதுங்கிக்கொண்டு இந்த இடத்தையே குறிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்க வேண்டியது. இப்போது ஓர் ஆள் இங்கே வரு

வான். உடனே, நீங்கள் அவனைக் கட்டிப் பிடித்துவிட வேண்டும். மிஸ்டர் சாரங்கபாணி, உமக்கு முக்கியமாக எச்சரிக்கை செய்கிறேன். கொஞ்ச நேரம் கொட்டாவி விடாமல் இருங்கள்..நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கட்டும்'' என்று அவன் கூறிவிட்டுச் சிறிதும் தாமதிக்காமல், ஜீப்பில் ஏறிக்கொண்டு மோகன், கான்ஸ்டபிள்கள் ஆகியோருடன் இடிந்த பங்களாவை நோக்கிப் புறப்பட்டான்.

அடுத்த சில நிமிஷங்களில் விறுவிறுப்பான சம்பவங்கள் நடந்துவிட்டன. மரத்தடியில் ஒளிந்துகொண்டிருந்த அனைவரும் ஓர் இடத்தையே குறிப்பாகப் பார்த்துக்கொண் டிருந்தனர். சாரங்கபாணியின் இதயம், பழைய மோட்டார் சைக்கிளைப்போலப் பல மடங்கு வேகமாக அடித்துக்கொண்டது.

அதோ—

அதோ, ஒரு முக்காடிட்ட உருவம் வெகு விரைவாக அப்புறமும் இப்புறமும் திருப்பிப் பார்த்துக்கொண்டு வருகிறதே, அது யார்? யார்?..சாரங்கபாணி எவ்வளவோ முயன்றும் அவ்வுருவம் யாரென்று அறிய முடியவில்லை.

பல ஜோடிக் கண்கள் தன்மீது பதிந்திருப்பதை அறியாத அந்த உருவம் மெள்ள மெள்ள வந்து தயங்கித் தயங்கிப் பார்த்தது. பிறகு—

அந்தக் கல்லைப் பெயர்த்து எடுத்து முக்கி முனகி அப்பால் நகர்த்த முயன்றது!

சாரங்கபாணி ஆச்சரியத்தின் எல்லையைத் தாண்டிவிட்டார். சிவசாமி சொன்னபடியே ஒரு திருட்டு உருவம் வருகிறதே! இங்கு ஒருவன் வருவான் என்று அவனுக்கு எப்படித் தெரியும்? இப்படி அவர் எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோது அந்த உருவம்—அப்பா, அதற்குத்தான் எவ்வளவு வலிமை!—கல்லை மெள்ளப் புரட்டிக்கொண்டு போய்ப் பழைய இடத்திலேயே வைத்தது.

'குபீர்' என்று மரத்தடியில் மறைந்திருந்த அனைவரும் வெளிப்பட்டு, பாய்ந்து, அந்த உருவத்தை ஒரே முட்டாக அமுக்கி அந்தண்டை இந்தண்டை நகர முடியாமல் பிடித்துக்கொண்டார்கள். பிறகு, சாரங்கபாணியும் சாவகாசமாக மரத்தடியிலிருந்து வெளிப்பட்டார்.

அவருக்கு உள்ளூற ஒரே ஆவல் - அந்த உருவம் யாரென்று பார்க்க. 'ஒரு வேளை சிவசாமியேகூட இப்படி வேடிக்கை செய்கிறானே! அவனே முக்காடிட்டுக்கொண்டு வந்திருக்கிறானே!' என்றுகூட அவர் எண்ணினார்.

அந்த உருவத்தின் இரண்டு கைகளையும் இரண்டு போலீஸ்காரர்கள் கெட்டியாகப் பிடித்துக்கொண்டனர். சாரங்கபாணி ஆவலுடன் முக்காட்டை விலக்கினார்.

அவ்வளவுதான்; 'ஆ!' என்ற அலறல் அவரிடமிருந்து வெளிப்பட்டது. ''ஆ, நீயா? என்னால் நம்பவே முடியவில்லையே!..டேய், ஓடிப் போய்க் கொஞ்சம் காபி கொண்டுவாடா. எனக்கு மார்பு அடைத்துவிடும்போலிருக்கிறது!'' என்று அலறினார்.

அப்போது அங்கே பலர் வரும் காலடிச் சப்தம் கேட்டது!

* * *

'கண்ணன்' நேயர்களைக் கடைசி முறையாக இடிந்த பங்களாவுக்கு வரும்படி அழைக்கிறேன்.

சிவசாமி முகம் மாறாமல் நின்றுகொண்டிருந்தான். அவனுக்கு எதிரே விடாக்கண்டனாகக் காளிமுத்துவும் நின்றுகொண்டிருந்தான். சோமுவுக்குப் பயத்தினால் பாதி உயிர் போய்விட்டது. இனிமேல் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று தெரிந்திருந்தும் காளிமுத்து திமிராக நின்றான்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

இளவரசன் சிலை

ஆர். வஜ்ரேசுவரி

நகரத்தின் நடுவில் உயர்ந்த மேடையின்மேல் இளவரசனின் அழகான உருவச் சிலை இருந்தது. இரும்பை உருக்கி வார்த்த அந்தச் சிலை பொன் தகட்டினால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. சிலையின் கண்கள் கோஹினூர் வைரக் கற்கள்! இடுப்பில் தொங்கிய பட்டாக் கத்தியின் நடுவிலோ ஒரு பெரிய பச்சைக்கல் பதிக்கப்பட்டிருந்தது. சூரிய ஒளியிலும் நிலவின் ஒளியிலும் அந்த இளவரசனின் வனப்பைக் கண்டு பிரமிக்காதவர்கள் இல்லை.

ஒரு நாள் மாலையில் மைனா ஒன்று அந்த நகரத்திற்கு வந்தது. இரவில் இளைப்பாறுவதற்கு ஏற்ற இடத்தைத் தேடியது. உயர்ந்த கோபுரங்கள், அடுக்கு மாளிகைகள், ஆல மரங்கள், அரச மரங்கள்



எதுவும் பிடிக்கவில்லை மைனாவிற்கு. அந்த இளவரசனின் சிலை அதைக் கவர்ந்தது. சிலையைச் சுற்றி பறந்து வந்த மைனா, 'இதை விடச் சிறந்த மாளிகை உண்டா?' என்று நினைத்தது. 'சிலையின் பொற்பாதங்களுக்கு இடையே தூங்க

லாம்' என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தது. அப்பொழுது அதன் மேல் ஒரு துளி தண்ணீர் விழுந்தது.

சில நிமிஷங்களில் இன்னொரு துளி விழுந்தது. 'வானத்தில் ஒரு மேகங்கூட இல்லையே - மழையா பெய்கிறது? வேறு இடம் தேட வேண்டியதுதான்' என்று நினைத்துக்கொண்டிருந்தபோது இன்னொரு துளி தண்ணீர் அதன்மேல் விழுந்தது.

சிலையை நிமிர்ந்து பார்த்தது. ஆஹா! என்ன ஆச்சரியம்! சிலையின் வைரக் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது. பொற் கன்னங்களில் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. நிலவின் ஒளியில் இளவரசனின் முகத்தில் அழகு நிறைந்திருந்தது மைனாவிற்குத் தெரிந்தது. ஆனால் அந்த அழகில் ஒரு துன்பத்தின் நிழல் தோன்றியதையும் மைனா கண்டது.

''நீ யார்? ஏன் அழுகிறாய்? உன் அழகு என்ன! கம்பீரம் என்ன! உனக்கு என்ன கவலை?'' என்று மைனா மூச்சு விடாமல் கேட்டது.

''மைனாவே, அருமை மைனாவே, நான் உயிருடன் இருந்தபோது உல்லாசமாக அரண்மனையில் வாழ்ந்தேன். கஷ்டம் என்பதே தெரியாத கேளிக்கை நிறைந்த வாழ்க்கை நடத்தினேன். நான் இறந்தவுடன் என் நண்பர்கள் எனக்குச் சிலை செய்து இங்கே வைத்தார்கள். 'இன்ப இளவரசன்' என்று என்னை அழைத்ததுபோலவே இந்தச் சிலைக்கும் அதே பெயர் அளித்தனர்.

''இந்த இடத்திலிருந்து நான் பார்க்கும் துன்பக் காட்சிகள் எண்ணில் அடங்காதவை. என் கண்ணீருக்குக் காரணம் பிறர் துன்பங்கள்தான். என் கண்ணீரை யார் கவனிக்கிறார்கள்? இன்று நீ வந்தது என் பாக்கியம்தான்.

''மைனாவே, அருமை மைனாவே, எனக்கு ஓர் உதவி செய்வாயா?

''இளவரசே நாளைக் காலையில் நான் இந்த ஊரைவிட்டுப் போக வேண்டும்; அதற்குள் செய்து முடிக்கும் வேலையாயின் சந்தோஷமாகச் செய்கிறேன்'' என்று பதில் அளித்தது. இளவரசனின் கண்ணீர் அதன் மனத்தை என்னவோ செய்தது.

''மைனாவே, அருமை மைனாவே, அதோ நகரத்தின் கோடியில் பல குடிசைகள் இருக்கின்றனவே. அதில் முதல் குடிசையில் ஒரு குழந்தை கடும் ஜுரத்தால் புரண்டுகொண்டிருக்கிறது. குழந்தையின் தாயார் மருந்து வாங்கப் பணமில்லாமல் தவிக்கிறாள். ஏன்? குழந்தைக்குப் பால் வாங்க அவளிடம் பணம் இல்லை. அழுது அழுது இப்பொழுதுதான் கண்ணை மூடியிருக்கிறாள். நாளைக்காலையில் மருந்து கொடுக்காவிட்டால் குழந்தை இறந்துவிடும்.

''மைனாவே, அருமை மைனாவே, என் பட்டாக் கத்தியின் நடுவில் இருக்கும் பச்சைக் கல்லைக் கொத்தி எடுத்துச் சென்று அந்தத் தாயாரிடம் கொடுத்துவிட்டு வருவாயா?''

''இளவரசே, அப்படியே செய்கிறேன்'' என்று சொல்லி, பச்சைக் கல்லைக் கொத்தி எடுத்துக்கொண்டு குடிசையை நோக்கிப் பறந்தது மைனா.

ஜுரத்தில் புரண்டுகொண்டிருந்த குழந்தையைச் சுற்றி வந்த மைனா, தாயின் அருகே பச்சைக் கல்லை வைத்துவிட்டுத் திரும்பியது.

''அரசகுமாரா, நீ சொன்னபடி செய்துவிட்டேன்'' என்று சந்தோஷமாகக் கூறியது.

''மைனாவே, அருமை மைனாவே, என் நன்றியை எவ்வாறு தெரிவிப்பேன்? நண்பனே, நீ நாளைத் தினம் போகத்தான் வேண்டுமா?''

''அரசகுமாரா, தேவையானால் நாளை இருந்துவிட்டு மறு நாள் போகிறேன்'' என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தது.

மறுநாள் பகல் முழுவதும் நகரத்தைச் சுற்றி அலைந்தது. இரவில் இளவரசனின் சிலையை அடைந்தது.

''மைனாவே, அருமை மைனாவே, அதோ இருக்கும் நதியின் கரையில் ஒரு சிறு வீடு தெரிகிறதே. அதில் ஓர் எழுத்தாளன் இருக்கிறான்.

அவன் சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகின்றன. அவன் 'அமர தீபம்' என்னும் அற்புதமான நூலை எழுதிக்கொண்டிருக்கிறான். அதை முடிப்பதற்கு எத்தனை தடைகள்! காகிதமும் மசியும் ஆகிவிட்டன. பசியால் கண்கள் இருண்டு தவிக்கிறான்..என்ன பரிதாபம்!..

''மைனாவே, அருமை மைனாவே, இதோ என் கண்ணில் பதித்திருக்கும் கோஹினூர் வைரத்தைக் கொத்தி எடுத்துச் சென்று அவனுக்குக் கொடுக்க மாட்டாயா? அதை விற்று அவன் தன் அருமையான நூலை முடிப்பான்'' என்று கெஞ்சினான் இளவரசன்.

''ஆகா! என்ன அநியாயம்! கண்ணைப் பிடுங்குவதா? இந்தப் பாவத்தை நான் செய்யமாட்டேன்.''

''மைனாவே, என் அருமை மைனாவே, என் பேச்சைத் தட்டாதே. அந்த எழுத்தாளனுக்கு, உதவி செய்வது மிகப் புண்ணியமான காரியம்'' என்றவுடன் மைனா அழுதுகொண்டே இளவரசனின் வலது கண்ணாய்ப் பிரகாசித்த வைரத்தைக் கொத்தி எடுத்துச் சென்று எழுத்தாளன் அருகே போட்டது.

''என் திறமைக்குப் பரிசு கிடைத்து விட்டதே. என் புத்தகத்தை இப்போதே முடித்துவிடுகிறேன்'' என்று உற்சாகத்துடன் எழுந்தான் எழுத்தாளன்.

''அரசகுமாரா, நீ சொன்னபடி செய்துவிட்டேன்'' என்று துக்கம் தோய்ந்த குரலில் மைனா பேசியது.

''மைனாவே, அருமை மைனாவே, நீ நாளைத் தினம் போகத்தான் வேண்டுமா?''

''இல்லை அரசே, இன்னும் ஒரு நாள் இருந்துவிட்டுப் போகிறேன்.''

மறுநாள் இரவு மைனா இளவரசனின் சிலையை அடைந்தது.

''இதோ என் சிலைக்கு அருகே ஓர் அநாதைப் பெண் அழுது கொண்டிருக்கிறாள். அவளுக்கு ஒரு வாரமாக வேலை எதுவும் கிடைக்கவில்லை. இன்னும் வெறுங்கையுடன் போனால் அவள் வளர்ப்புத் தாயார் அவளை அடித்து நொறுக்கி விடுவாள். இந்தக் குளிரில் இங்கேயே இருந்தால் இறந்து விடுவாள்.

''மைனாவே, அருமை மைனாவே, என்னுடைய இடது கண்ணிலிருக்கும் வைரத்தை எடுத்துச் சென்று அந்த அநாதைப் பெண்ணுக்குக் கொடுக்க மாட்டாயா?''

''அரசகுமாரா, என்ன அநியாயம்! இன்னொரு கண்ணையும் பிடுங்குவதா? நீ முழுக் குருடனாகி விடுவாயே! இந்தப் பாவச் செயலை நான் செய்ய மாட்டேன்'' என்று அழுதுகொண்டே பதில் அளித்தது.

''மைனாவே, என் அருமை மைனாவே, என் பேச்சைத் தட்டாதே - அந்தப் பெண்ணுக்கு உதவி செய்வது எவ்வளவு புண்ணியமான காரியம்! ஊம். சீக்கிரம் ஆகட்டும்.''

மைனா அழுதுகொண்டே இளவரசனின் இடது கண்ணாய்ப் பிரகாசித்த வைரத்தைக் கொத்தி எடுத்துச் சென்று அநாதைப் பெண்ணின் கையில் போட்டது.

''கண்ணீரைக் கந்தல் பாவாடையால் துடைத்துக்கொண்டு ஆகாசத்தைப் பார்த்து, 'ஆண்டவன் தான் கொடுத்திருக்கிறான்' என்று சொல்லிக்கொண்டே வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தாள் சிறுமி.

''அரசகுமாரா, நீ சொன்னபடி செய்துவிட்டேன்'' என்று வருத்தத்துடன் கூறியது.

''மைனாவே, அருமை மைனாவே, நீ செய்த காரியங்களை என்னால் மறக்க முடியுமா? இனிமேல் நீ சந்தோஷமாய்ப் போய் வா'' என்று உத்தரவு கொடுத்தான்.

''அரசகுமாரா, நான் போவதாவது? குருடாகிவிட்ட உன்னை விட்டுப் போவதா? அது முடியாது'' என்று தீர்மானமாகப் பதிலளித்தது.

''என் மைனாவே, இனிமேல் மழைக்காலம். நான் நனைந்தால் பரவாயில்லை. உனக்கு அது நல்லது அல்ல. அருமை மைனாவே, நீ போய்விடு'' என்று கெஞ்சினான்.

''அரசகுமாரா, நான் உன்னுடன் தங்குவதற்கு அநுமதி கொடு'' என்று சொல்லிக் கொண்டே சிலையின் பாதங்களுக்கிடையே படுத்து உறங்கியது.

இரவில் தினந்தோறும் தான் பார்த்த பல இடங்களைப் பற்றியும், அதிசயமான காட்சிகளைப் பற்றியும் கதை கதையாக எடுத்துச் சொல்லியது மைனு. அவைகளைக் கேட்டு இளவரசன் சந்தோஷப்பட்டான்.

ஒரு நாள் இளவரசன் ''மைனுவே, உன் கதைகள் எல்லாம் அற்புதம்தான். இந்த நகர மக்களின் இன்ப துன்பங்களைப் பார்த்து வந்து சொல்வாயா? மக்களின் துன்பங்களைவிட மனத்தைக் கவரும் ரசமான விஷயங்கள் உண்டா?'' என்று கேட்டான்.

''இவ்வளவுதானே! நான் தினந்தோறும் சுற்றிப் பார்த்து வந்து சொல்கிறேன். கண்களைக் கருணையால் இழந்த உனக்கு இந்த உதவி செய்யமாட்டேனு?'' என்றது மைனு.

பணக்காரர்களின் உல்லாச வாழ்க்கையில் நிறைந்திருக்கும் இன்பங்கள்; ஏழைகளின் வாழ்க்கையில் வழிந்தோடும் கண்ணீர் ஆறுகள்; பசியால் பரிதவிக்கும் குழந்தைகளின் அலறல்கள்: வேலையின்றி வாடி வதங்கும் இளைஞர்கள்; இவைகளை எல்லாம் மைனு உருக்கமாக எடுத்துக் கூறியது. இவைகளைக் கேட்ட இன்ப இளவரசனின் ஒளியிழந்த கண்களிலிருந்து கண்ணீர் மாலையாய்ப் பெருகியது.

''மைனுவே, அருமை மைனுவே, என் உடலை அலங்காரம் செய்யும் பொன் தகடுகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் ஏழைகளுக்குக் கொடுத்து வா. அப்பொழுதாவது அவர்கள் கண்ணீர் மறையும்'' என்று இளவரசன் சொன்னபடி மைனுவும் செய்தது.

'இன்ப இளவரச'னின் சிலையின் அழகு மங்கியது: ஆனுல் அந்த நகரத்தின் ஏழைகளின் முகத்தில் சந்தோஷம் நிறைந்தது.

மழைக் காலம் வந்துவிட்டது: அடிக்கடி மழையில் நனைந்த மைனுவுக்குத் தான் இறந்துவிடும் நேரம் நெருங்குகிறது என்று தெரிந்தது.

''அரசகுமாரா, உன்னைப் பிரியும் காலம் வந்துவிட்டது'' என்று வருத்தத்துடன் கூறியது.

''மைனுவே, அருமை மைனுவே, நீ சந்தோஷமாய்ப் போய்வா. உன்னை நான் என்றும் மறக்கமாட்டேன்'' என்று விடை கொடுத்தான் இளவரசன்.

''அரசகுமாரா, நான் எங்கே போகிறேன் தெரியுமா? நிரந்தரமாய்த் தூங்கும் உலகத்திற்குப் போகிறேன்'' என்று சொல்லி இளவரசனின் தோளின்மேல் ஒரு நிமிஷம் உட்கார்ந்தது. அடுத்த நிமிஷம் 'தடால்' என்று 'இன்ப இளவரசன்' கால்களிடையே விழுந்து உயிர் துறந்தது.

அடுத்த கணம் இளவரசனின் இருதயம் இரண்டாகப் பிளந்தது.

மறுநாள் காலையில் அந்தப் பக்கம் வந்த நகராண்மை அதிகாரிகள் இளவரசனின் சிலையைப் பார்த்தனர். 'இந்த இளவரசனின் சிலையின் அழகெல்லாம் மங்கி அலங்கோலமாய் இருக்கிறது. தங்கக் கவசத்தைக் காணவில்லை. கண்களில் ஒளி வீசிய வைரங்களைக் காணேம். இதை உருக்கிவிடலாம்'' என்றனர்.

''ஐயோ, இதோ ஒரு மைனுவேறு காலடியில் செத்துக்கிடக்கிறது'' என்ருர் நகரத் தலைவர்.

மறுநாள் நடந்த நகராண்மைக் கழகக் கூட்டத்தில் ஒரு பெரிய விவாதம் நடந்தது: இளவரசனின் சிலையை உருக்கி அந்த இரும்பினுல் யார் சிலையைச் செய்வது என்ற விவாதம்தான்.

உலைக்களத்தில் சிலையை உருக்கிய வேலையாள், ''என்ன ஐயா, இது அதிசயம்! இந்தச் சிலையின் பிளந்த இருதயம் உருகமாட்டேன் என்கிறதே'' என்ருன்.

''சரி, அந்த இருதயத்தைத் தூக்கி எறிந்துவிடு'' என்ருன் ஒருவன்.

தேவலோகத்தில் கடவுள் தேவதூதர்களைப் பார்த்து, ''பூலோகத்திலிருந்து இரண்டு அருமையான பொருள்களைக்கொண்டு வாருங்கள்'' என்ருர்.

தேவ தூதர்கள் இறந்த மைனுவையும் இளவரசனின் பிளந்த இருதயத்தையும் கடவுள் முன்னுல் வைத்தனர்.

''ஆஹா! தேவலோகத்தில் இருக்க வேண்டிய அருமையான பொருள்கள்'' என்று பாராட்டினுர் கடவுள்.

கடமை தீர்ந்தது

'ஹரி'

"டேய், அதோ ஓடுகிறது டோய்; விடாதே; டேய்;'' இப்படிப் பல இளம் குரல்கள்! தொடர்ந்து கற்கள் வீசி எறியப்படும் சப்தம். அந்தோ! அதன் இடையே ஒரு நாயின் பரிதாபகரமான ஓலம், 'ஏன் என்னை இப்படி அடித்துக் கொல்கிறீர்கள்? நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன்?' என்று கேட்பது போலிருந்தது.

வெளியே வந்தேன். என் தம்பியும் அந்தக் கூட்டத்தில் இருந்தான். என்னைப் பார்த்ததும் ஒன்றும் தெரியாத அப்பாவிபோல நின்றான்.

''ஏய் பையன்களா, எல்லாரும் இப்படி வாருங்கள்'' என்றேன். ஏதோ மந்திரத்தால் கட்டுண்டவர்கள்போல் எல்லாப் பையன்களும் வந்தார்கள். திண்ணையில் அவர்களை உட்காரச் சொன்னேன்.

''ஏன் அப்படி அந்த வாயில்லா ஜீவனை துன்புறுத்துகிறீர்கள்?'' உங்களை அவ்விதம் யாராவது அடித்தால் எப்படி இருக்கும்? கேளுங்கள், நான் சொல்லப் போகும் சம்பவத்தை. அதைக் கேட்ட பிறகாவது இந்த மாதிரி வழிகளுக்குப் போகமாட்டீர்கள் அல்லவா?'' என்றேன் ஒரே மூச்சில்:

''சரி, அப்படி என்ன சம்பவம் நடந்தது? அதைச் சொல்லுங்கள் அண்ணா'' என்றார்கள் எல்லாரும் ஒரே குரலில்:

* * *

கொள்ளிட நதிக்கரையில் ஓர் அழகான கிராமம். எண்ணி வைத்தாற்போல முப்பது நாற்பது வீடுகளே அங்கே இருந்தன. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் கோவில் ஒன்று. பண்ணையார் பரமசிவம் என்றால் அழுத பிள்ளையும் வாய் மூடும்.

அவர் மைந்தன் ராஜு பிடிவாதக்காரன்; முரடனும்கூட. பண்ணையார், வெளியூர்களுக்குச் சென்றால் திரும்பி வருங்கால் தம் அருமைக் குமாரனுக்கு ஏதாவது பரிசுப் பொருள் கொண்டு வராமல் இருக்கமாட்டார்.

அம்முறை அவர் அவ்விதம் திரும்பி வரும்போது ராஜுவுக்கு ஓர் அழகான நாய்க்குட்டி வாங்கி வந்தார். அவர் வீட்டிலே அதற்கு முன்னரே ஒரு பெரிய நாய் வளர்ந்து வந்தது. ராஜுவுக்கு அதைக் கண்டால் ரொம்பப் பிடிக்கும். புதிய நாயை அவனுக்குப் பிடிக்கவில்லை. வெறுக்க ஆரம்பித்தான். ஒவ்வொரு சமயம் அதை அடித்தும் இருக்கிறான்.

அப்போதெல்லாம் புதிய நாயின் கண்களில் கண்ணீர் வழியும். அதற்கு அவன்மீது அளவுகடந்த பிரியம் இருந்தது. பெரிய நாய் அதை எல்லாம் பொருட்படுத்தவில்லை.

ஒரு நாள்.........

பெரிய நாய் ராஜுவின் அறைக்குச் சென்றது. ராஜு அங்கே இல்லை. மெதுவாகச் சுற்றுமுற்றும் பார்த்தவாறே சென்றது. மேஜைமீது வைத்திருந்த மைக்கூட்டைத் தன் காலால் தட்டிவிட்டு, திரும்பிவிட்டது. அப்போதுதான் திரும்பி வந்த ராஜு இதைக் கண்டு



என்ன அண்ணே! என்ன நினைச்சிக்கிட்டு இருக்கிறே? நம்ம பையனைப் பயமுறுத்தினியாமே? ஊதிப்போயிருந்தா பயந்திடுவேன்னு நினைச்சியா? அப்படியே தூக்கிப்போட்டுப் பந்தாடிப்புடுவேன், தெரியுமா? ஜாக்கிரதை!

விட்டான். அதிலிருந்து அவன் புதிய நாய்க்குத் தனி பரிவு காண்பிக்க ஆரம்பித்தான்.

பெரிய நாய்க்கு இதைக் கண்டால் ரொம்பப் பொருமை உண்டாவது இயற்கையல்லவா? அப்படியே ஆயிற்று. பெரிய நாய் பலவிதமாய் விஷமங்கள் செய்து, அந்தக் காரியங்களுக்குச் சின்ன நாயைக் காரணமாய்க் காட்டியது. பாவம்! பண்ணையார் வரவர பெரிய நாய் செய்யும் விஷமங்களைக் கண்டு பிடிக்க முடியாமல், சின்ன நாயே அதற்குக் காரணம் என எண்ணிப் பொறுமையை இழக்கலானார். அவ்விதம் ஒரு நாள் கோபம் எல்லை மீறியவராய் தம் கையிலுள்ள கைத்தடியால் சின்ன நாயை நன்றாக அடித்துத் துரத்தி விட்டார்.

ராஜு எவ்வளவோ கெஞ்சியும் பயனில்லாமல் போய்விட்டது. சில நாட்கள் வரை அவன் சாப்பிடவே இல்லை. நாளாக நாளாக அவன் ஏக்கம் சிறிது சிறிதாய் மறைந்தது.

நாட்கள் கடந்தன. மாதங்கள் பறந்தன. வருடங்கள் சில உருண்டோடி விட்டன.

ஒரு நாள் இரவு மணி பதினொன்று. அமாவாசை. தெருவே நிச்சப்தமாய் இருந்தது. இருளின் பயங்கரத்தை மிகைப்படுத்த தூரத்தில் கோட்டான்களின் கூக்குரல். தெரு மூலையில் ஒரு நோஞ்சலான நாய். இயற்கையின் சிருஷ்டியில் உள்ள கோரம் அனைத்தும் திரண்டு எடுத்தாற்போல அது இருந்தது. எலும்புக் கூடோ என எண்ணும் நிலையில் காணப்பட்டது. மெல்ல உயிர் ஊசலாடும் கடைசி நேர மனிதர்களின் கண்களில் காணப்படும் ஏக்கம்; பரிதாபம்!

மெல்ல ஓர் உருவம் பரமசிவத்தின் பங்களாவின் வாசல் கேட்டைத் தாண்டிக் குதித்தது. மெல்ல அடிமேல் அடி எடுத்து வைத்துக் கொண்டே பங்களாவின் வாசலை அடைந்தது. அவனைப் பின் தொடர்ந்தது ஒரு சிறு நாய். ஒரு வேளை அவனுடையதாய் இருக்கலாம். அவன் அதைக் கவனிக்கவே இல்லை.

உருவம் சற்று நின்று அண்ணாந்து மேலே பார்த்தது. பரமசிவத்தின் மாடி அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சிறு உறுமல் சத்தம் கேட்டுத் திரும்பியது அந்த உருவம். அவன் பின்னால் பெரிய நாய் ஒன்று பயங்கரமாய் விழித்தவாறு நின்றுகொண்டிருந்தது. அவன் அதை லட்சியம் செய்யாமல் தன் கையிலுள்ள 'பிஸ்கட்' துண்டை வீசி எறிந்தான். அதைத் தின்பதற்கு அந்த நாய் ஓடியது.

உருவம் எவ்விதத் தடங்கலும் இன்றி நேராகப் பணப்பெட்டி இருக்குமிடம் சென்று, பெட்டியை உடைத்துக்கொண்டிருந்தது. வாசலில் நாயின் சத்தம். சத்தமா அது? பயங்கர ஓலம் நாராசமாய்க் கேட்டது.

தொல்லை பொறுக்க மாட்டாமல் விளக்கைப் போட்டுவிட்டுக்

கீழே இறங்கி வந்தார் பண்ணையார்: அவர் கண்ட காட்சி!

ஒருவன் காலை ஒரு நாய் பிடித்த படி விடாமல் கௌவிக்கொண்டிருந்தது. அவனோ தன்னால் முடிந்தவரை அதனிடமிருந்து விடுபடப் பாடுபட்டான். தன் கையிலுள்ள இரும்புத் தடியால் அதை கண்டவாறு அடித்துக்கொண்டிருந்தான். அடியின் வலி பொறுக்க மாட்டாமல் அது அலறியது. துடித்தது. நிலைமை புரிய வெகு நேரம் ஆகவில்லை. ஆட்கள் உதவியுடன் அந்தத் திருடனைப் பிடித்து விட்டார்கள். ஆனால் கீழே உயிர் விடும் தறுவாயில் இருக்கும் நாயை ராஜு கவனித்தான்.

திடுக்கிட்டான். "அப்பா! இது நம் பழைய சின்ன நாய் அப்பா. இது! ஐயோ.. நீங்கள்..: அடித்து விரட்டி விட்டீர்களே, அதே நாய்.. அப்பா"..: என அலறினான். பாவம், உயிருடன் இருக்கையில் அடி உதை கொடுத்துக் கொடுமைப் படுத்தியதற்காக ராஜுவின் பரிதாபகரமான அலறலை எப்படித் தணிப்பது எனப் பண்ணையாருக்குப் புரியவில்லை.

கீழே பார்த்தார்.... அந்த நோஞ்சல் நாய் தன் கடமை தீர்ந்தது என எண்ணியவாறு உயிரை விட்டது. தூரத்தில் 'விஷம் கலந்த பிஸ்கட்'டைத் தின்ற பெரிய நாயும் உயிரை விட்டது. இரண்டுக்கும் எத்தனை வேறுபாடு?.... அதன் பிறகு சிறுவர்கள் இனி அம்மாதிரி நாயை அடிப்பதில்லை என உறுதிமொழி அளித்துவிட்டு விளையாடச் சென்றனர்.

வாழ்த்திப் போற்றுவோம்!

சின்னத் தம்பி சின்னத் தம்பி சேதியைக் கேளு!
செம்மைப் பாரதத்தின் வீரர் சிறப்பினைக் கேளு!

பொன்னான சுதந்தரத்தைப் பறிக்க வந்தவர்
புரட்டி உருட்டி ஆட்சி பெற்ற ஆங்கிலேயர்கள்
எண்ணும் நூறு வருடங்கட்கு முன்(பு) இந் நாட்டிலே
இணையில் வீரர் கோபத்துக்கு இலக்காய் ஆகினர்.

வெள்ளையராம் ஆங்கிலேயர் பாரத நாட்டில்!
வியாபாரம் செய்ய வந்தோர் ஆட்சிப் பீடத்தில்!
துள்ளியெழுந் துணர்வு பெற்றார் பாரத வீரர்
துரத்திடவே திட்டம் தீட்டிச் சீறியெழுந்தார்.

சுதந்தரத்தின் இன்ப வெறி தூண்டிட வீரர்
சூறாவளிப் புயலெனவே எதிர்த் தெழுந்துமே
உதயத்திலே அன்னியரின் ஆட்சி தன்னையே
ஒழித்திடவே கங்கணமும் கட்டி விட்டனர்.

பறந்ததடா! பறந்ததடா! சுதந்தரத் தீயும்
பாரதத்தின் மூலை முக்கு எங்கும் பரவி
இறந்துவிட்ட பிணங்களென வாழ்ந்த மக்களின்
இதயத்திலே பெருங்கனலை மூட்டியதடா!

பாரதிநம் அன்னைமுகம் கோபித்தெழுந்தாள்
பதை பதைத்தார் வெள்ளையரும் பயந்து நடுங்கியே
சூராதி சூரர்களைச் சூழ்ச்சியால் வென்று
சுதந்தரத்தின் சுவாலையையே ஒழித்துப் போட்டனர்.

சுவாலை நின்றால் சுதந்தரமாம் கங்கும் மாயுமோ?
வெயில் படாமல் திரையை வைத்தால் பரிதி ஒழியுமோ?
மறையாத சுதந்திரதா கத்தைமூட்டியே
மறைந்து விட்டார் மாவீரர்; வாழ்த்திப் போற்றுவோம்.

'—இதயன்'

ஹா!

ஜோவலன் வாஸ்

காட்சி 1.

[வத்ஸலாவின் அழகிய வீடு. காலை நேரம். தோட்டத்திலிருந்து மிதந்துவந்த இளங் காற்றை ரசித்த வண்ணம், ஜன்னலோரமாக உள்ள ஒரு சோபாவில் அமர்ந்து வத்ஸலா புஸ்தகமொன்றைப் புரட்டிக்கொண் டிருக்கிருள். அந்தச் சமயம் அவளது அண்ணன் கோபு அவசரமாக வருகிருன்.]

கோபு: வத்ஸலா! ஏ வத்ஸலா! உன்னை எங்கேயெல்லாம் தேடுவது?..

வத்ஸலா: என்னண்ணு....ஏன் இவ்வாறு ஓடி வருகிருய்? கொஞ்சம் மெதுவாகத்தான் வாயேன்!..

கோ: அதற்கில்லை வத்ஸலா!.. வந்து..(மெதுவாக) வந்து அப்பா போய்விட்டாரா?

வத்: ஆமாம்! இப்பொழுதுதான் போனர்.

கோ: (நிம்மதியாக) அப்பாடா! ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் லீவு. அன்றைக்கும் உட்கார்ந்து படிடா என்ருல்..? வத்ஸலா! நீ புண்ணியம் செய்தவள்! உன்னை யாரும் ஏன் என்று கேட்கப் போகிறதில்லை.

வத்: அது யாருடைய குற்றம்? படங்களை ஒழுங்காகப் படிக்காததனல் இந்த வருடம் பரீட்சையில் பெயிலாகிவிட்டாய். நான் அப்படி இல்லையே!..

கோ: ஆமாம்!..பெரிதாகப் பீற்றிக்கொள்ளாதே!..

வத்: ஏன்? உள்ளதைக் கூறினல் உறைக்கிறதோ?

கோ: இதோ பார் வத்தல்! சும்மா வளவளவென்று பேசாமல் கேள், விஷயத்தை. அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஒரு நாடகம் நடைபெறப் போகிறது!

வத்: (வியப்புடன்) என்ன? நாடகமா?

கோ: (உற்சாகமாக) ஆமாம் வத்ஸலா! நாடகமேதான்!

வத்: எங்கே நடைபெறப் போகிறது?

கோ: நம்ம மெஜஸ்டிக் தியேட்டரில்தான்! பிரபல சினிமா நக்ஷத்திரங்கள் எல்லோரும் தோன்றப் போகின்றனராம்.

வத்: அப்படியானல் கட்டாயம் போக வேண்டும்.

கோ: ஆமாம் வத்ஸலா!..நீ..தான் அப்பாவிடம் சொல்லி..

வத்: (பயந்து) அப்பாவிடமா?

கோ: ஆமாம்! நீதான் சொல்ல வேண்டும். நான் ஏதாவது பேச்சை எடுத்தால் கட்டிவிடுவார் முதுகில் டின்னை..வத்ஸலா! நீதான் எப்படியாவது..

வத்: சரி! ஆனல் அப்பாவிடம் எப்படிச் சொல்லி உத்தரவு பெறுவது என்றுதான் புரியவில்லை.. ஹா..அண்ணு, நீதான் ஏதாவது ஒரு யோசனை சொல்லேன்!

கோ: யோசனையா? நானு சொல்ல?..வத்ஸலா! எனக்கு மட்டும் ஏதாவது தோன்றியிருந்தால் உன்னிடமா வந்திருப்பேன் உதவிக்கு!

வத்: கொஞ்சம் பொறு! (யோசிக்கிருள்) உம்..ம்.. அண்ணு!..பஸ்ட் கிளாஸ் ஐடியா ஒன்று! கேள்! சொல்கிறேன்! (காதுக்குள் ஏதோ சொல்கிருள். கோபு அதைக் கேட்டுவிட்டு ஒரு கணம் யோசித்துத் தலையை ஆட்டுகிருள்)

வத்: எப்படியண்ணு என் யோசனை?

கோ: வெற்றியை மாத்திரம் தரட்டும்! பின்பு நோபல் பரிசு தருவதற்கு நான் தயார்!

வத்: ஆமா! பெரிய இவரு!.. உஷ்!..அதோ, அப்பா வருகிருர் போல் தோன்றுகிறது. ஓடிப்போய் உன் அறையிலுள்ள புத்தகத்தைக் கட்டி அழு! (கோபு ஓடுகிருன்; வத்ஸலா புஸ்தகத்தைப் புரட்டுகிருள் மீண்டும்)

காட்சி 2.

[மேற்படி சம்பவம் நடந்த ஞாயிற்றுக்கிழமைக்கு அடுத்த சனிக்

கிழமை. வேலைக்குப் போக ஆயத்தம் செய்து கொண்டிருந்த வத்ஸலா அப்பா வேதரத்தினம் பதறுகிறார், பர்ஸைக் காணுமல்!]

அப்பா: வத்ஸலா!..வத்ஸலா!.. இங்கே வா!..

வத்: என்னப்பா? என்னத்தைத் தேடுகிறீர்கள்?

அப்: என் பர்ஸைக் காணவில்லையம்மா!..நீ எடுத்தாயா?

வத்: ஐயோ!..நான் ஏன் அதை எடுக்கப் போகிறேன்?..ஆமாம், எங்கே வைத்தீர்கள்?

அப்: இந்த மேஜையில்தான் வைத்தேன்.

வத்: என்ன, இந்த மேஜையில் வைத்ததா காணுமல் போய் விட்டது? அப்படி யார் வரப் போகிறுர்கள், உங்கள் அறைக்கு? ஹ..அப்பா! ஒரு வேளை கோபு அண்ணு எடுத்து வைத்திருக்கலாம்!..

அப்: ஆமாம்!..விசாரித்தால் விளங்குகிறது!..(உரத்து) கோபு! டேய் கோபு!..

கோ: (வந்துகொண்டே) என்னப்பா? என்ன விஷயம்?

வத்: அண்ணு! அப்பாவுடைய பர்ஸைக் கண்டாயா? காணவில்லையாம்!..

அப்: ஆமாடா! கண்டாயா?

கோ: எனக்குத் தெரியாது அப்பா! எப்பொழுது காணுமல் போச்சு?

அப்: நேற்று ராத்திரி சாப்பிட்டு விட்டு வெற்றிலை வாங்க உன்னிடம் சில்லறை தந்தேனல்லவா? அப்படியே மறதியாக மேஜைமேல் வைத்துவிட்டேன் போலிருக்கிறது! இப்பொழுது பார்த்தால் காணவில்லை. ஆபீஸுக்கு வேறே நேரமாகிறது.

வத்: அப்பா, ஒன்று செய்யுங்கள்! பேசாமல் ஆபீஸுக்கு லீவுக்கு எழுதிப் போடுங்கள். இன்று அரை நாள்தானே?..அப்புறம் பர்ஸைத் தேடினுல்தான் கிடைக்கும்.

அப்: ஆமாம் வத்ஸலா! நீ சொல்வதும் சரிதான்!..டேய் கோபு!.. இதோ ஒரு கடிதம் தருகிறேன். அதைத் தபால்பெட்டியில் போட்டு விட்டு வா! (கடிதம் ஒன்றை எழுதிக் கொடுக்கிறுர்: கோபு அதைப் போட ஓடுகிறுன்.)

வத்: அப்பா! கோபுவும் எடுத்திருக்க மாட்டான். நேற்று ராத்திரி முழுவதும் அவன் படித்துக் கொண்டிருந்தான்.

அப்: ஆமாம்! எனக்குத் தெரியும். கொஞ்ச நேரம் ஆனதும் எனக்கு நன்ருகத் தூக்கம் வந்தது. அதனுல் என்ன நடந்தது என்று கூடத் தெரியவில்லை..ஹ..எப்படிப்போயிருக்கும்?..

(அந்தச் சமயம் அவர்கள் வீட்டு நாய் 'டாமி' வள்..வள்..என்று குரைக்கிறது!)

வத்: அப்பா! இப்பொழுதுதான் புரிகிறது! நேற்று இரவு முழுவதும் நம்ம நாய் குரைத்துக்கொண்டே இருந்தது.

அப்: ஏம்மா! ராத்திரி, நாயைக் கட்டிப் போட்டிருந்தாயா? அவிழ்த்துவிட்டிருந்தாயா?

வத்: அவிழ்த்துத்தான் விட்டிருந்தேன். ஒரு வேளை—நம்ம 'டாமி'யே உள்ளே வந்து பர்ஸைக் கவ்விக் கொண்டுபோய் எங்கேயாவது போட்டிருக்கலாமோ?

அப்: ஆமாம் அம்மா!..ஆனுல் அது எங்கே கொண்டு போட்டதோ?

வத்: பயப்படாதீர்கள் அப்பா!.. நம்ம நாய் வேறே எங்கேயும் கொண்டு போட்டு விடாது. தோட்டத்தில் எங்கேயாவது போட்டிருக்கும்.

அப்: ஆமாம்! இருக்கலாம்!.. வா போய்த் தேடலாம். (போகிறுர்கள்)

[தோட்டத்தில் இருவரும் தேடிக்கொண்டிருக்கின்றனர். அதே சமயம் வத்ஸலா ஒரு செடியினருகிலிருந்து துள்ளி எழும்புகிருள்]

வத்: அப்பா!..அப்பா!..இதோ உங்களுடைய பர்ஸ்!..இந்தச் செடிக்கு அடியில் கிடந்தது!

அப்: எங்கே? கொண்டு வா இங்கே!..வத்ஸலா கெட்டிக்காரி. தேடிப் பிடித்துவிட்டாள்!..



கோபு: பணம் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள் அப்பா!

(அப்பா பார்க்கிறார். திருப்தி ரேகைகள் படருகின்றன அவர் முகத்தில்)

அப்: எல்லாம் சரி! . . வத்ஸலா? நீ ரொம்பக் களைத்துப் போனாய்! . . இதோ ஐம்பது நயாபைஸா. கோபுவைக் கூடக் கூட்டிக்கொண்டு போய் ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிடு.

கோபு: சே! சே] ஐஸ்கிரீம் தின்றால் ஜுரம் வரும் அப்பா! வேண்டாம்!

வத்: ஆமாம் அப்பா! . . ஹ . . ஹ வந்து . . வந்து . .

அப்: என்னம்மா, ஏன் தயங்குகிறாய்? விஷயத்தைக் கூறு!

வத்: வந்து . . நாளைக்கு மெஜஸ்டிக் தியேட்டரில் ஒரு நல்ல நாடகம் ஒன்று . .

கோபு: (ஒன்றும் தெரியாதவன் போல்) ஆமாம் அப்பா! நானும் கேள்விப்பட்டேன். பிரபல சினிமா நட்சத்திரங்கள் நடிக்கப் போகின்றனராம். பிரமாதமாக இருக்கும் என்று எல்லோரும் சொல்கிறார்கள்! . .

அப்: அப்படியா? சரி! . . உங்கள் ஆசையை நான் கெடுக்கவில்லை. கட்டாயம் போவோம்! . .

கோபு: }
வத்: } வெரிகுட்! வெரிகுட்!

(துள்ளிக் குதித்து இருவரும் ஓடுவதைப் பார்த்து ரசிக்கிறார் அப்பா வேதரத்தினம்)

காட்சி 3

[ஞாயிற்றுக்கிழமை காலை. அப்பா மார்க்கட்டுக்குப் போயிருக்கிறார். வாசலில் நின்ற வேப்பமரத்தடியில் வத்ஸலாவும் கோபுவும் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

கோபு: வத்ஸலா! நமது யோசனை இவ்வளவு இலகுவில் வெற்றியைத் தேடித்தரும் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை.

வத்: ஆமாம்! பெரிய புத்திசாலி! 'நமது' யோசனையாமே! 'என்' யோசனை என்று சொல்!

கோபு: ஆமாம்! என்னதான் யோசனை உன்னுடையதாக இருந்தாலும் அதைச் செயலாற்றியது நான்தானே! அப்பப்பா! அதை நினைத்தாலே பயமாக இருக்கிறது! அப்பா தூங்கிய பிறகுதான் பர்ஸை எடுக்கவேண்டும் என்று விடிய விடிய கண் விழித்த கஷ்டம் வேறே! தோட்டத்திலே எடுத்துப் போடப் போகும் பொழுது பாம்போ பல்லியோ கடித்து விட்டால் என்ன செய்ய என்ற பயம் வேறே!

வத்: இப்பொழுது இப்படிப் பயந்தால்!..உஹூம்!...அப்பா வரும் நேரமாகிறது!..வா போகலாம்!....(இருவரும் உள்ளே போகின்றனர்) (காம்பவுண்ட் சுவரருகே நின்று கொண்டிருந்த அப்பா வேதரத்தினம் புன்சிரிப்புடன் உள்ளே வருகிறார்)

காட்சி 4

[அன்று மாலை ஐந்து மணி. வத்ஸலாவும் கோபுவும் டீக்காக டிரஸ் பண்ணிக்கொண்டு புறப்படத் தயாராக இருக்கிறார்கள். அவர்களது அப்பா வேதரத்தினம் பர்ஸை எடுத்து ஜேபியில் போட்டவாறு வருகிறார் தியேட்டருக்குப் போக.]

பேப்பர்காரன்: ஸார் பேப்பர்!.. பேப்பர்!....மாலைப் பதிப்பு!.... வாசலில் (கூவிக்கொண்டே போகிறான்)

வத்: டேய் கோபு!..பேப்பர் ஒன்று வாங்கு!..நாடகத்தைப் பற்றி ஜோராக விளம்பரம் பண்ணியிருப்பான்!

கோபு: ஆமாம்!....அப்பா.... பேப்பர் வாங்க வேண்டும்!

(அப்பா வாங்குகிறார். கோபு ஆவலுடன் வாங்கிப் பிரித்துப் பார்க்கிறான். மறுகணம், ''ஹா!'' என்று விழுகிறான் மயங்கி.)

வத்: ஐயையோ!...என்னப்பா இது?..

அப்: எதையோ படித்து விட்டல்லவா மயங்கி விழுந்து விட்டான்! கொஞ்சம் பொறு!....என்னவென்று பார்ப்போம். (பேப்பரை உரத்துப் படிக்கிறார்)..''அறிவித்தல். இன்று மெஜஸ்டிக் தியேட்டரில் பிரபல சினிமா நடிகநடிகையர் தோன்றி நடிக்கவிருந்த 'தெய்வமா, தேசமா?' என்ற நாடகம் எதிர்பாராத சில காரணங்களால் ரத்து செய்யப்பட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்!''

வத்: ஹா!—

அப்: நீயும் மயங்கி விழுந்து விடாதே!..பார்த்தாயா? என்னை ஏமாற்ற நினைத்தீர்கள்!..

வத்: ஆ..

அப்: ஏன் வாயைப் பிளக்கிறாய்? கோபுவும் நீயும் இன்று காலையில் பேசியதைக் கேட்டேன். ஆனாலும் உங்கள் மேல் இரக்கப்பட்டு நாடகத்துக்குக் கூட்டிப் போக எண்ணினேன். ஆனால்—

நான் மனது வைத்தாலும் தெய்வம் விரும்பவில்லை போலும்! ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்:—ஏமாற்றாதே!—ஏமாற்றப்படுவாய்!

[பிரமை பிடித்தாற் போல் நிற்கும் வத்ஸலாவைப் பார்த்துச் சிரித்துவிட்டு உள்ளே போகிறார் அப்பா வேதரத்தினம். ஜாடையாக மயக்கம் தெளிந்த கோபு விழிக்கிறான்.]

நீங்களும் நானும்

[இந்தப் பகுதிக்கு இப்பொழுது ஏராளமான கடிதங்கள் வந்துகொண் டிருக்கின்றன. முடிந்த வரையில் வரிசைக் கிரமமாகப் பதில்கள் தரப்பட்டு வருகின்றன. தங்கள் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லையே என்று மீண்டும் கடிதம் எழுதாதீர்கள். இரண்டு இதழ் பொறுத்திருந்து பாருங்கள். அதற்குள் விடை வரவில்லையானல் வேறு கேள்விகள் எழுதிக் கேட்க வேண்டியதுதான்.

—ஆர்வி.]

பெரிய நல்லையா; மணக்காடு

கே: இந்தியாவில் முதல் கிரிக்கட் கிளப் எங்கே, எந்த ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது?

ப: 1792 - இல் கல்கத்தாவில் ஏற்படுத்தப்பட்டது.

எஸ். ஆர். பிரேம்குமார், ஸ்ரீநிவாச நகர்.

கே: ஞாபக சக்தி அதிகம் இல்லாதவன் வெற்றி காண முடியுமா?

ப: ஞாபக சக்தி வேண்டியதைப் போலவே நமக்கு மறதியும் மிக மிக அவசியம். நல்ல அநுபவங்களையும் நமக்குப் பிறர் செய்த நன்மை தரும் நிகழ்ச்சிகளையும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். ஆனல் தீமையான எண்ணங்களையம் தீங்கு செய்தவர்களையும் மன்னிப்பதோடு மறந்து விடவும் தெரியவேண்டும். இரண்டும் உள்ளவன்தான் வெற்றியை நிச்சயம் காணமுடியும்.

இரா. இராமன், பட்டுக்கோட்டை

கே: எதிர்காலத் திட்டங்கள் உங்களுக்கு ஏதாவது உண்டா?

ப: யாரோ ஒரு கிழவன் கூறினனும், தனக்கு நாளையைப்பற்றிக் கவலையில்லை என்று. அதேபோல நானும் கடந்தநாட்களைப் பார்த்து விட்டேன். இன்று மகிழ்ச்சியோடு இருக்கிறேன். எதிர்காலத் திட்டங்களைப்பற்றி நான் கவலைப்படுவதில்லை. வேலை; வேலை; வேலை!

எஸ். எம். நிலாம், கொழும்பு-12

கே: ஹலோ, இப்ராஹீம் சேப்ராஹிமே கண்டீர்களா?

ப: இது என்ன, பாய், கேள்வி?

ஈ. லக்ஷ்மணன், சென்னை-7

கே: புனைபெயர் கொண்ட சில எழுத்தாளர்களுடைய உண்மைப் பெயரைக் கூற முடியுமா?

ப: அவர்களுடைய அநுமதியின்றிக் கூறுவது முறையல்ல; சரியல்ல.

சுப்பிரமணியன், திருப்பூர்.

கே: ஆடு, மாடுகளில் மலடு கிடையாது. மனிர்களில் மாத்திரம் மலடு இருக்கக் காரணம் என்ன?

வி: ஆடு மாடுகளில் மலடு இல்லையென்று சொல்வது தவறு, மனிதர்களைக் காட்டிலும் அவற்றில் மலடு மிகக் குறைவு. அவ்வளவுதான்.

எழில் இறைவன், வெள்ளாளப்பட்டி

கே: நியூயார்க் நகரின் முக்கியச் சிறப்புகள் யாவை?

ப: உலகிலேயே பெரிய நகரம் நியூயார்க். உலகிலேயே மிகப் பெரிய சுதந்தரச் சிலை (151 அடி உயரம்) அங்கே இருக்கிறது. உலகிலேயே மிகப் பெரிய துறைமுகம் (180 பாலங்கள் கொண்டது) நியூயார்க் துறைமுகம்தான். உலகத்திலேயே உயரமான எம்பயர் ஸ்டேட் கட்டடம் அங்கேதான் இருக்கிறது. உலகிலேயே மிகப் பெரிய நூல்

நிலையங்களில் ஒன்று நியூயார்க் பப்ளிக் லைப்ரரி. இங்கே 30 லட்சத்துக்கு மேற்பட்ட நூல்கள் இருக்கின்றன. இன்னும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. உலகிலேயே பெரியது நியூயார்க்கின் லாகார்டியா விமான நிலையம். உலகிலேயே மிக நீளமான பாதாள ரெயில்வே நியூயார்க்கில் தான் இருக்கிறது. இதன் நீளம் 554 மைல்கள்.

தமிழ் நாடன், மேட்டுப்பாளையம்.

கே: செல்வ நிலையில் இந்தியா ஆருவது என்ருல் மற்ற ஐந்து நாடுகளின் பெயர்கள் எவை?

ப: அமெரிக்கா, கானடா, பிரிட்டன், சுவிட்ஜர்லாந்து, ஜப்பான்.

அமுதன், குடியேற்றம்.

கே: நம்பிக்கை எதிலிருந்து பிறக்கிறது?

ப: எதிர்காலத்திலிருந்து!

சு. முருகன், திண்டுக்கல்.

கே: பெனிஸிலின் என்ற அற்புத மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்? எந்த ஆண்டு?

ப: அலெக்ஸாண்டர் பிளெமிங் என்பவர். 1929-இலேயே கண்டு பிடித்துவிட்டார்.

இ. சுகிர்தராதா, பருத்தித்துறை.

கே: அமெரிக்காவில் நடித்துக் கீர்த்தி பெற்ற இந்தியச் சிறுவன் யார்? அவன் இப்போது எங்கே?

ப: மைசூரைச் சேர்ந்த சாபு என்ற சிறுவன். இப்போது வளர்ந்து பெரியவனுகிவிட்டான்.

ஸி. வி. சீனிவாசமூர்த்தி, நுங்கம்பாக்கம்.

கே: ஜப்பான் ஆசியாவின் கிழக்கில் உள்ள தீவு. பிரிட்டன் ஐரோப்பாவின் மேற்கில் உள்ள தீவு. இரண்டில் எது பெரியது? உலகிலேயே பெரிய தீவு எது?

ப: ஜப்பான்தான் இரண்டில் பெரியது. உலகிலேயே பெரியது ஆஸ்திரேலியா.

சு. மாலதி, ஜாம்ஷெட்பூர்.

கே: பெண்களுக்கு அழகு அவசியமா? அறிவு அவசியமா?

ப: அழகு. அறிவும் இருந்தால் சிறப்பு. பெண்களின் அழகு இல்லாத அறிவு ஆறுதல் கிடைக்காத வீடு. குண அழகு சேராத வெளியழகு வாசமில்லாத மலரைப் போன்றது.

ஹாஜாமொஹிதீன், கொழும்பு-13.

கே: மதம், நாடு இரண்டில் முக்கியமானது எது?

ப: நாடுதான் முக்கியமானது. பல மதத்தினரும் வாழ்கிருர்களே நாட்டில்!

பி. முருகேசன், சேலம்-5.

கே: பெரிய புராணம் பாடிய சேக்கிழாரின் ஊர் எது?

ப: தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூர். அங்கே அவருக்கு ஒரு கோயில்கூட இருக்கிறது.

சு. முருகன், திண்டுக்கல்.

கே: உலகில் மிகவும் உஷ்ணமான பிரதேசம் எது?

ப: தென் துருவம்தான். டிஸம்பர் 22-இல் சூரியனுக்கு வெகு சமீபத்தில் இருப்பதால் கொடிய உஷ்ணமாக அந்தப் பிரதேசம் இருக்கிறது.

விஜயன், திருவாடுதுறை.

கே: பசியுள்ள பாம்பின் வாயில் தவளை அகப்பட்டுக்கொண்டால் பாம்பைக் கொன்று தவளையை மீட்பதா, தவளையைக் கொல்லட்டும் என்று பாம்பை விட்டுவிட்டுப் போவதா?

ப: 'உன் வேலையைச் சரிவர செய். பிறர் விஷயங்களில் வீணுகத் தலையிடாதே!' இதெல்லாம் அநுபவ மொழிகள். உனக்கு எதிரில் இப்படி எதுவும் நடக்காது. நடந்தாலும் நீ ஓடியே வந்துவிடப் போகிருய்; தவளை பூச்சி புழுக்களையும், பாம்பு தவளையையும் விழுங்குவது இயற்கை. உன் குதர்க்கத்துக்கு அர்த்தமே இல்லை. நான் இன்னென்று சொல்கிறேன். அந்தப் பாம்பைக் கொல்ல மேலே ஒரு கருடன் வட்டமிட்டுக்கொண்டிருக்கிறது என்று வைத்துக்கொள். இப்படியே முடிவில்லாமல் சொல்லிக்கொண்டு போகலாமே!

ஜெ. மாணிக்கம், மார்க்கம்பட்டி.

கே: பொது அறிவை வளர்ப்பது கூரிய திருஷ்டி என்று விடை கூறியிருக்கிறீர்களே, சரிதானு?

ப: சூரிய திருஷ்டி என்றால் ஆங்கிலத்தில் கூறுகிறார்களே 'Observation' என்று; அதைக் குறிப்பிடுகிறேன். தன்னைச் சுற்றிலும் நடப்பதைப் பார்ப்பதில் அக்கறையும் அவற்றை நன்கு அறிதலும் பொது அறிவை வளர்ப்பனவாகும். கல்வி ஞானம், அநுபவ ஞானம், கேள்வி ஞானம் மூன்றுக்கும் உதவிகரமாக இருக்கும் நோக்கையே சூரிய திருஷ்டி குறிக்கிறது. 'கண்ணைத் திறந்து கருத்துடன் பார்; அகக் கண் மலரும்' என்பது ஆன்றோர் உரை.

என். வேதகிருஷ்ணன், மாயூரம்.

கே: இலட்சியம் என்றால் என்ன?

ப: குறிக்கோள் என்று பொருள். பெரிய வீரனாக அல்லது தலைவனாக விளங்க வேண்டும் என்று நீ உறுதியோடு எண்ணினால் அது உன் லட்சியம்.

வே. ரங்கநாதன், புவனகிரி.

கே: மாணவர்கள் சினிமா பார்ப்பது நல்லதா?

ப: மாணவர்களுக்கு ஏற்ற படமாக இருந்தால் பார்ப்பது நல்லது தான். மேல் நாடுகளில் சினிமாவின் மூலமாகவே சிறந்த கல்வி அளிக்கப்படுகிறதே. பொது அறிவையும் மன விரிவையும் விசாலப்படுத்தும் பல பொழுதுபோக்குப் படங்கள் அங்கெல்லாம் காட்டப்படுகின்றன. அப்படிப்பட்ட படங்களைப் பார்ப்பது நல்லது தான். தமிழிலே சரித்திரக் கதையாகட்டும், புராணக் கதையாகட்டும் சமூகக் கதையாகட்டும் எதுவுமே சரியான முறையில் எடுக்கப்படுவதில்லை. பல தவறான உண்மைகளையும் கருத்துக்களையும் அவை இளம் மனத்தில் விதைத்து விடுகின்றன.

வி. சடகோபாச்சாரி, பட்டுக்கோட்டை.

கே: அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுகள் எந்த நாட்டில் நடைபெறப் போகின்றன?

ப: இத்தாலி நாட்டில்.

எம். கே. நாதன், காரைக்கால்.

கே: ஒன்றரைக் கண்ணை ஆபரேஷன் மூலமோ, வேறு சிகிச்சை மூலமோ திருத்திக்கொள்ள முடியுமா?

ப: இப்போதைக்கு முடியாது.

ஏ. தண்டபாணி, டி. என். பாளையம்.

கே: முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவு..?

ப: நாடெங்கிலும் தேர்தலில் காங்கிரஸுக்கு வெற்றி! வாழ்க்கைத் தரம் 17% உயர்ந்திருப்பதாகக் கூறுகிறார்கள்; ஆனால் வாழ்க்கைச் செலவுதான் அதிகரித்திருப்பதாகத் தோன்றுகிறதே தவிர, தரம் உயர்ந்ததாகத் தெரியவில்லை.

கோகுலன், புவனகிரி.

கே: தமிழகத்தில் தற்போது மலிந்து காணப்படுபவை யாவை?

ப: பேச்சு; உபதேசம்; கோஷம்; திறப்பு விழா.

தி. கோவர்த்தனன், புவனகிரி.

கே: காவியம் புனைந்த கம்பனும் திருமறை இயற்றிய திருவள்ளுவரும் இன்று உயிருடனிருந்தால் என்ன செய்துகொண்டிருப்பார்கள்?

ப: தென் மொழிகள் புத்தக அற நிலையத்துக்கு அலைந்து காலை ஒடித்துக்கொண்டிருப்பார்கள். அல்லது கடிதம் எழுதி எழுதி, கையை ஒடித்துக்கொண்டு இருப்பார்கள் தம் நூல்களைப் பதிப்பிக்க!

பி. ஜி. நந்தகுமார், பம்பாய்-14.

கே: ஐயா, உமக்கு ஒரு கூடை கோவா மாம்பழம் அனுப்பி வைக்கிறேன். அப்புறமாவது கண்ணனை மாதம் மும்முறையாகக் கொண்டு வாருமே, ஐயா! இதில் என்ன கஷ்டம்?

ப: எனக்கு என்ன கஷ்டம்? கோவா மாம்பழம் அனுப்புவதென்றால் உனக்கல்லவா கஷ்டம்? போர்த்துக்கீசியர்கள் உன்னையும் ஒரு கோவா விடுதலை வீரன் என்று கைது செய்துவிட்டால்-?

எஸ். சி. சேகர், புதுக்கோட்டை.

கே: சாப்பிட்டவுடனே ஸ்நானம் செய்வது உடம்புக் கெடுதலா?

ப: ஆம்; அது ஜீரணத்தைப் பாதிக்கும் என்று கூறுகிறார்கள் டாக்டர்கள்.

அட ஈசுவரா!

'மூட்டை'

ஈசுவரனுக்குக் கதை எழுதுவதில் மிகவும் ஆசை. அவன் எத்தனையோ கதைகள் எழுதிப் பார்த்துவிட்டான். ஆனால் ஒன்றுவது பத்திரிகையில் பிரசுரமாகவில்லை. கடைசியாக ஒரு கதை எழுதி, அத்துடன் இந்தக் கடிதமும் எழுதி அனுப்பினன்:

''அன்புள்ள 'பிறவிப் பயன்' ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். இத்துடன் 'தலைவிதி' என்ற கதையை அனுப்பியிருக்கிறேன். தாங்கள் இதை பிரசுரிக்காவிட்டாலும் பரவாயில்லை. கதையை ஒரு முறையாவது படித்துப் பார்க்க வேண்டுகிறேன். பிறகும் பிரசுரிக்கப் பிரியப்படாவிட்டால் இந்தக் கதையைத் தாங்களே 'மிருத்யு நேசன்' ஆசிரியருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் போதுமான தபால் தலையும் இத்துடன் இருக்கிறது.

இப்படிக்கு,
ஈசுவரன்.''

ஆனல் சில நாட்களுக்குப்பின் கிடைத்த கடிதம் இதுதான்:

''அன்புள்ள ஈசுவரனுக்கு,

தங்கள் கதையும் கடிதமும் கிடைத்தன. கதையைப் படித்துப் பார்த்தேன். ஆனல் தாங்கள் கேட்டுக் கொண்டபடி 'மிருத்யு நேசன்' பத்திரிகைக்கு அனுப்ப முடியவில்லை. ஏனெனில் அவர்கள் படித்தபின் தங்களுக்குத் திருப்பி அனுப்பப் போதுமான ஸ்டாம்புகளைத் தாங்கள் வைக்க மறந்துவிட்டீர்கள். அதனல் அவர்களுக்கு அனுப்பாமலே நீங்கள் வைத்திருந்த தபால் தலையை உபயோகித்து உங்களுக்குத் திருப்பிவிட்டோம். மன்னிக்க வேண்டுகிறேன்.

ஆசிரியர், பிறவிப்பயன்.''

வி. எல். நரசிம்மன், சென்னை-1.

கே: மத்திய மந்திரிகளின் பெயர்களையும் அவர்கள் நிர்வகிக்கும் இலாகாக்களையும் கூறுவீர்களா?

ப: அடேயப்பா! 39 மந்திரிகளின் பெயர்களையும் அவர்கள் இலாகாக்களையும் கூறுவது என்றல் அதற்கு ஒரு தனி இதழ் அல்லவா வெளியிட வேண்டும்?

சி. நீலகண்டன், தாம்பரம்.

கே: நாட்டின் புனிதமான தொழில் புரிபவர் யார்?

ப: மகாத்மா காந்தியடிகள் நகர சுத்தித் தொழிலாளியின் வேலைதான் புனிதமானது என்று ஒரு முறையல்ல, பல முறை கூறியிருக்கிறர்.

எம். பி. எம். பஸ்லுக்ஹக்,
முகத்துவாரம்.

கே: இந்திய அரசியல் தலைவர்களில் மிகுந்த அரசியல் அறிவு கொண்டவர்கள் யார்?

ப: நேருஜி, ராஜாஜி, ஜயப்பிரகாஷ்.

கே. பெருமாள்சாமி, கோவை.

கே: ஸியாட்டோ என்றல் என்ன?

ப: ஸியாட்டோ (Seato) என்றல் தெற்காசிய நாடுகளின் தற்காப்பு உடன்படிக்கை ஸ்தாபனம் என்று பொருள். (South East Aaian Trcaty Organsation)

கே: 'பஞ்சசீலம்' என்றல் என்ன? இதை வகுத்தவர் யார்?

ப: பஞ்சசீலம் என்பது நாடுகள் எல்லாம் வாழ நமது நேரு வகுத்த ஐந்து கொள்கைகள்.

1. பரஸ்பர நாடுகளின் எல்லைகளுக்கும் உரிமைகளுக்கும் மதிப்புக் கொடுப்பது.

2. பரஸ்பரம் பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பது.

3. உள்நாட்டு விவகாரங்களில் பரஸ்பரம் தலையிடாமல் இருப்பது:

4. சமத்துவ நன்மைகளைப் பரஸ்பரம் பாதுகாப்பது.

5. பரஸ்பரம் ஒத்து வாழ்வது. இவையே பஞ்சசீலக்கொள்கைகள்.

சிறந்த

பேச்சாளனுக வேண்டுமா?

ஆர்வி

சிறந்த பேச்சாளனுக விளங்க வேண்டும் என்று யாருக்குத்தான் ஆசை இல்லே? எனக்கு ஆசை; உங்களுக்கு ஆசை; இப்படியே எல்லாருக்கும் ஆசைதான். எழுத்தாளர், இசைவாணர், ஓவியர் இவர்களேயெல்லாம்போல, பேச்சாளர் என்ருல் அத்தனே மதிப்பு; அத்தனே பெருமை.

எதனுல் இந்த மதிப்பு, பெருமை எல்லாம்? எழுத்தைப் போலவே, இசை, ஓவியம் இவற்றைப் போலவே பேச்சும் ஒரு கலே. அதனுல்தான் மதிப்பு.

ஒருவர் இருவரோடு உரையாடு வதும் சரி, பலர் முன்னிலேயில் மேடைமீது நின்று சொற்பொழிவு நிகழ்த்துவதும் சரி, ஓர் அரிய வித்தைதான். அந்த வித்தையில் தேர்ச்சி பெற்றவர் என்ருல் பெருமைதானே!

எல்லாருக்குமே ஆசை இருக்கலாம். ஆனுல் எல்லாருமே பேச்சாளராகிவிட முடியுமா?

முடியும். முயன்ருல் முடியும்; பயின்ருல் முடியும்.

பல பேருக்கு எழுதத் தெரியும். ஆனுல் எழுத்துக் கலேஞராக ஆகிவிட முடியாது. எத்தனேயோ பேருக்கு இனிய குரல் இருக்கிறது. ஆயினும் அத்தனே பேரும் இசை வல்லுநராகிவிட முடியாது. இதே போலத்தான் ஓவியமும்; ஒவ்வொரு கலேயும்.

ஆனுல் பேச்சுக் கலே இருக்கிறதே, இது மற்றக் கலேகளேப் போல, அத்தனே கஷ்டமானது அல்ல. சிந்திக்கத் தெரிந்த எவனும் பேச்சாளனுக முடியும். சிந்திக்க வேண்டும் என்ருல் மற்றக் கலேகளுக்கு அவசியமான அபூர்வ கற்பனேகள் செய்யத் தெரிய வேண்டும் என்பதல்ல. ஒரு விஷயத்தைத் தொடர்ந்து சிந்திக்கும் திறன் இருந்தால் போதும்: பலருக்குப் பேசத் தெரியும். ஆனுல் பேச விஷயமே கிடைக்காது. காரணம் சிந்தனேக் குறைவுதான். சிலர் நன்ருகச் சிந்தனே செய்வார்கள். ஆனுல் பேச வராது. சிந்தித்த விஷயத்தைச் சொல்லாக வடிப்பதே பேச்சு. சிந்தனே வலுப்பட வலுப்படத்தான் உண்மை புலப்படும். உண்மையைப் புலப்படுத்தக் கூடியவைகளேயே நாம் சிறந்த கருத்துக்கள் என்கிருேம். உண்மையை வெளிப் படுத்துவதுதான் கலே. நல்ல பேச்சு என்ருல் சிறந்த கருத்துக்களே அழகான முறையிலே எடுத்துச் சொல்வதுதான். பேச்சின் மூலம் பேருண்மைகளே வெளிப்படுத்துவதே பேச்சுக் கலே.

பேச வேண்டும் என்ற நாட்டம் உள்ளவர்கள் கண்டிப்பாகப் பேச்சாளராக முடியும். அதற்கு முதலில் நம்பிக்கை வேண்டும். சிந்திக்கின்ற முயற்சியும் சிந்தித்தவைகளே அழகோடு சொல்லத் தெரிகின்ற பயிற்சியும் வேண்டும். இந்த நம்பிக்கை, முயற்சி, பயிற்சி மூன்றும் இருந்துவிட்டால் நிச்சயம் பேச்சாளராகி விடலாம்.

நம்பிக்கை என்பது என்ன? நம்மால் எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கூச்சமின்றி, குறைபாடுகள் இன்றி, சபையிலுள்ளவர்களுக்கு அலுப்பின்றி, சுவையாகச் சொல்லமுடியும் என்கிற தன்னம்பிக்கையைத்தான் குறிப்பிடுகிறேன்.

கல்வி, கேள்வி, அநுபவம் ஆகியவற்ருல் கற்றுணர்ந்தவைகளே முறையாக வரிசைப்படுத்தி எண்ணிப் பார்ப்பதுதான் சிந்தனே. ஆழ்ந்து சிந்தித்தால் ஆழ்ந்த உண்மைகள் புலனுகின்றன. அந்த உண்மைகளேத் தெளியும் முயற்சியே சிந்தனே.

எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிப் பேசலாம் என்கிற நம்பிக்கை உண்டாகி விட்டது. அந்த விஷயத்தைப் பற்றிய உண்மைகளையும் சிந்தித்துப் பார்த்துக் கொண்டாகிவிட்டது. இனி மூன்றுவது அதை வெளிப்படுத்துவது. எங்கேயிருந்து அதைத் தொடங்குவது, எப்படிக் கொண்டுபோவது, எவ்விதம் அதை முடிப்பது என்பனவற்றை அறிவதே பயிற்சி.

சிறந்த பேச்சாளனாக வேண்டியதற்குப் பொதுவான பண்புகள் இவையே. இவற்றைப் பொதுவாகப் பார்த்தால் பலருக்குப் பேச்சாளனாகவே முடியாதோ என்ற பயம் வந்துவிடும். அந்த ஆசை வீண் ஆசை என்று எண்ணி விடுவார்கள்.

ஆனால் அப்படியெல்லாம் பயப்படவே வேண்டியதில்லை. சில உண்மைகளைத் தெரிந்துகொண்டு விட்டால் யாருமே பேச்சாளனாகி விட முடியும். அந்தத் துறையில் வெற்றியும் காணமுடியும். ஒரு துறையில் வெற்றி என்றால் வாழ்க்கையே வெற்றிதான். அதிலும் பேச்சுத் துறையில் வெற்றி கண்டவன் ஆற்றல் மிக்க அரசியலில் கூட வெற்றி காண்கிறான். சரித்திர ஏடுகளைப் புரட்டினால், அரசியல் துறையை ஆராய்ந்து பார்த்தால், வாள் வீரனுக்கும் மேலே சொற்போர்வீரன் அமர்ந்து விடுவதைக் காணலாம். ஓர் எழுத்தாளன் நாடாண்டதை நாம் கண்டதில்லை. இசைப் புரவலன் என்ற பட்டம் பெற்றிருப்பான். ஆனால் அவனுக்கு அந்த வாய்ப்பு ஏற்பட இடமிருந்ததில்லை. ஓவியனும் அப்படியே. ஆனால் வல்லமை பொருந்திய சாம்ராஜ்யத்தையே எதிர்த்து, வென்ற அரசியல் தலைமை பூண்ட பேச்சாளர்களை நாம் அறிந்திருக்கிறோம். வளவு மகத்துவம் வாய்ந்த சக்தி பேச்சுக்கு உண்டு.

வாள் எடுத்து ஐந்து அல்லது ஐம்பது பேர்களைக்கூட வெல்வது சுலபமாக இருக்கலாம். ஆனால் ஐம்பது பேர்களுடைய இதயங்களை வென்று உறவாக்கிக் கொள்வது சுலபமான காரியமா? ஒருகாலும் எளிதாகாது. ஆனால் ஒரு சிறந்த பேச்சாளனால் அது முடியும். எழுத்தின் மூலமாகக்கூட அது உடனே சாத்தியமல்ல. எல்லாருமே எழுதுவதை உடனே படித்துவிடுவார்கள் என்று கூற முடியாது. படித்தாலும் அத்தனை பேரும் உறவாகிவிடுவார்கள் என்று சொல்ல முடியாது. காரணம் எழுத்தின் சக்தி வேறு. அது மனிதனுடைய அறிவைக் கவரக் கூடியது. அறிவைக் கவர அதிகக் காலம் ஆகும். ஆனால் சிறந்த பேச்சாளனால் எதிரே கேட்கின்ற அத்தனை பேரையும் வசியப்படுத்தி விட முடியும். பேச்சு மனிதனுடைய மனத்தை, கேட்கும் போதே கவர்ந்து விடுகிறது. இரும்பு மனத்தைப் பேசியே கரைத்துவிட முடியும். உறுதியைக் குலைத்துவிட முடியும்: துரும்பைக்கூடத் தூணாகத் தூக்கி நிறுத்திவிட முடியும். பஞ்சையைப் பலவானாக்க முடியும். கோழையைத் தீரனாக்க முடியும். தீரனைக் கண்ணீர்விடச் செய்யவும் முடியும்:

ஆகவே அந்தத் துறையில் வெற்றி கண்டால் வாழ்க்கையே வெற்றி பெற்றது மாதிரித்தான்.

அந்த வெற்றியை எப்படிப் பெறுவது? அதற்குச் சில வழிகள் இருக்கின்றன. எதையும் கற்க வேண்டுமானால், கற்றது கைகூடி வரவேண்டுமானால் அதற்கு முறையான பயிற்சி வேண்டும். அந்தப் பயிற்சியில் வளர்ச்சி காண தீவிரமான அக்கறை வேண்டும்: உறுதி வேண்டும். உபாசனை வேண்டும்.

அதற்கான முயற்சியை நாம் எப்படி உருவாக்க வேண்டும் என்பதைத்தான் சுருக்கமாக இங்கே தர முயன்றிருக்கிறேன். பொதுவான சில விவரங்களை நாம் மனத்தில் வைத்துக்கொண்டால் போகப் போக நம் அநுபவத்தின் மூலமாக இன்னும் பல நமக்குத் தெரிய வரும். எல்லாவற்றையும் விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் இந்தக் கட்டுரை போதாது. அதற்குத் தனி நூலே எழுதியாக வேண்டும்.

எனவே நாம் நினைவில் கொள்ள வேண்டியவற்றை மட்டும் இங்கே பார்ப்போம்.

எடுத்த எடுப்பிலே மேடைமீது ஏறி நின்ருல் பேச்சு வந்துவிடுமா? பிறர் பேசுவதைப் பார்த்தால் சுலபமாக வந்துவிடும் என்றுதான் நமக்குத் தோன்றும். ஆனுல் போய் நின்று பார்த்தால்தான் அந்தக் கஷ்டம் நமக்குத் தெரியும். பேச்சு வராது; நடுக்கம்தான் வரும். குளிர் ஜுரம் கண்டவனுக்காவது கம்பளியைப் போர்த்திவிடலாம். ஆனுல் மேடையில் நடுங்குபவனுக்குப் போர்த்த முடியுமா? போர்த்திஞல்தான் நடுக்கம் நிற்குமா?

அதற்கு ஒரு வழி இருக்கிறது: அன்ருடம் நாம் பிறரோடு உரையாடுகின்ற முறையைச் சிறிது மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். யாரோடு பேசினுலும் சரிதான்; நிதானமாக, படிப்படியாகக் கவனித்துப் பேசப் பழக வேண்டும். எதிரியினுடைய முகத்தைக் கவனித்து அவனுடைய மனத்தைக் கவரும் விதத்தில் உரையாட வேண்டும். பேச்சிலே பணிவு, அடக்கம், உறுதி, சிந்தனையின் தெளிவு எல்லாம் இருக்க வேண்டும். விளையாட்டுப் பேச்சாக இருந்தாலும் விவாதமாக இருந்தாலும் அதிலே ஒரு வேகம் இருக்கும்படிச் சொல்லப் பழக வேண்டும். நமது கருத்துக்களை யோசித்து வெளியிடும் முறையைப் பழக்கிக் கொள்ள வேண்டும். நமது கருத்தைப் பிறர் மறுக்கலாம்; ஆனுல் மதிக்கும்படி இருக்கவேண்டும். அதற்காக யோசிக்கிறேன் என்று மணிக்கணக்காக யோசித்துக் கொண்டே இருந்தால் விஷயமும் போய்விடும்; எதிரே இருப்பவனும் எழுந்து போய்விடுவான். கருத்துக்களை விரைவாகவும் விஷயத்தை ஒட்டியும் வெளிப்படுத்தப் பழகுவதுதான் ஆரம்பப் பயிற்சி.

இந்த ஆரம்பப் பயிற்சிக் காலத்திலேயே பிறர் மனம் புண்படும்படியான சொற்களை விலக்கவும் பயில வேண்டும். மனம் புண்படாத சொற்களே மனமாற்றத்தை விளைவிக்கக் கூடியவை என்பதை நாம் போகப் போகக் காண்போம். கண்டிக்கலாம்; ஆனுல் கண்ணியக் குறைவு சிறிதும் நேரக் கூடாது.

பையன்: வேண்டாமப்பா இது! இந்தப் பிள்ளையாருக்கெல்லாம் அவர் மாதிரித் தொந்தியையே காணேமே!

கிண்டல்கூடச் செய்யலாம். பேச்சுக் கலையில் கருத்து வேற்றுமையுடையவர்கள் வாயை அடக்க இடம் இருக்கிறது. ஆனுல் விரசமான சொற்கள் வந்துவிடக் கூடாது.

இந்தப் பயிற்சியினுல் நம் வார்த்தை எவ்வளவு தூரம் எதிரில் கேட்பவர்களுக்குப் படுகிறது என்பதை நாம் உணர முடியும். நம் சொல்லை மதித்துக் கேட்கச் செய்ய நமக்கு எவ்வளவு ஆற்றல் வந்திருக்கிறது என்பதை நாமே தெரிந்து கொள்ள முடியும். ஏதேனும் குறைபாடு இருந்தால் அதை ஆரம்பத்திலேயே நம்மால் திருத்திக்கொள்ள முடியும்.

சரி; நமக்கு ஒரு விஷயத்தைத் தெளிவாகப் பேச வந்துவிடுகிறது என்று முடிவானுல் அப்புறமாவது திடீரென்று மேடையிலே ஏறிப் பேசிவிட முடியுமா?

முடியாது; முடியாது.

நாம் ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றிப் பேச வந்தது இருக்கட்டும். ஆனுல் முன்னே குறிப்பிட்டது போல், கூட்டத்தைப் பார்த்ததுமே நமக்குப் பேச வந்ததெல்லாம் மறந்து போகும். கை கால் எல்லாம் பிறர் காணும்படி நடுங்கத் தொடங்கிவிடும். நெஞ்சு பட படக்கும். மேஜையைப் பிடிப்போம்; மைக் இருந்தால் அதைப் போய்

ஆதாரமாகப் பிடித்துக் கொள்வோம். பேச்சே வராது. அப்படி வந்தாலும் நம் குரலே நமக்கு வேறு யார் குரலோ போல ஒலிக்கும். சபையிலுள்ளவர்களைப் பார்க்க முடியாமல் தவியாகத் தவிப்போம்; திணறுவோம்.

எனக்குத் தெரிந்த பள்ளியாசிரியர் ஒருவர்; விஷயம் தெரிந்தவர்; பள்ளி வகுப்பில் பேசிப் பேசிப் பழக்கம் உள்ளவர்; ஒரு கூட்டுறவு நிலையத் துவக்க விழாவுக்கு அவர் வந்திருந்தார். கூட்டத் தலைவர் திடீரென்று அவரைப் பேசும்படி அழைத்துவிட்டார். பார்க்கப் போனால் கூட்டுறவு நிலையம் ஆரம்பிப்பதற்கே அவர்தாம் பொறுப்பாளி. சிறந்த மதி வன்மை படைத்தவர்.

ஆனால் என்ன நடந்தது? அவர் தயங்கிக்கொண்டே மேடைக்கு வந்தார். அவர் உதடுகள் தம்மை அழைத்த தலைவரைச் சபிப்பது போல் முணுமுணுத்தன. வந்தவர் என்ன செய்வதென்று தெரியாமல் மேஜையைப் பிடித்துக்கொண்டார். உடம்பை வளைத்துக்கொண்டார். கையை முறுக்கினார்; காலைத் திருப்பினார். தலையையோ தூக்கவேயில்லை. வெகு பிரயாசைக்குப் பிறகு, அவர் வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகள் இவ்வளவு தான்:

''தலைவர் அவர்களும் மற்றுமுள்ள...மார்களும்..என்ம்...ம்ழ்ந்த...வண...ம்...இப்பொழுது ..ம். ம்..வந்து....வந்து..வந்து ..உங்க...க்கு..ம்..ம்..எல்லாம் தெரியும்..வந்து..நான் சொல்ல .....ஒன்றுமேயில்லை. கூட்டு.... கூட்டு....''

இந்த வார்த்தைகளைப் பேசுவதற்குள் அவர் பட்ட பாடும் தவித்த தவிப்பும், உடம்பைப் போட்டு முறித்துக்கொண்ட காட்சியும் பார்க்கவே பரிதாபமாக இருந்தன. அதற்குள் அவர் மேடையிலேயே திரும்பி நின்றுகொண்டு விட்டார். நாற்காலிச் சட்டத்தில் ஏறி நின்றுகொண்டார். ''ம்..ம்..வந்து... என்ன சொல்ல வருகிறேன் என்றால்..வருகிறேன் என்றால்..வருகிறேன் என்றால்..ம்..'' என்று கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி வார்த்தைகளைத் திருப்பித் திருப்பிக் கூறலானார். விழி பிதுங்கிவிட்டது. உமிழ் நீரை விழுங்க முடியவில்லை. பாதிச் சொற்களை எச்சிலோடு சேர்த்துச் சொல்லாமலே விழுங்கிவிட்டார். பாக்கிப் பாதியைப் பயம் காற்றோடு விழுங்கிவிட்டது.

''சும்மா தைரியமாகப் பேசுங்கள், ஐயா!'' என்று கூட்டத் தலைவர் அவரைக் கூட்டத்தைப் பார்த்து நிற்கும்படித் திருப்பி நிறுத்தினார். தைரியத்துக்காக முதுகில் தட்டிக் கொடுத்தார்.

''என்ன சொல்ல வருகிறேன் என்றால்..எனக்குப் பேசிப் பழக்கமில்லை. அதனாலே..என்ன சொல்ல வருகிறேன் என்றால்..என்றால்.. கூட்டு..கூட்டு..''

அதற்குமேல் சபையினால் சிரிப்பை அடக்க முடியவில்லை. 'கூட்டாவது, குழம்பாவது' என்று கொல்லென்று சிரித்துவிட்டது. ஆசிரியர் தம் பேச்சை முடிக்காமலே அந்தச் சிரிப்பலைகளுக்கிடையே கொலைக்களத்திலிருந்து தப்பித்து ஓடுபவர் போல் ஓடியே போய்விட்டார். அப்புறம் ஒரு வாரம் போல அவர் ஊரில் வெளியில் தலை காட்டவேயில்லை.

மேடையில் பேசுவது நடுக்கத்தைத் தரும் என்பதற்கு மட்டும் இதைச் சொல்லவில்லை. சபையில் இருப்பவர்களுக்கு என்னதான் நம்மிடம் மதிப்பும் அன்பும் இருந்தாலும் நம்முடைய சேஷ்டைகளைப் பார்த்துப் பொறுமையோடு இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. சேஷ்டைகளை யார் செய்தாலும் வருகிற சிரிப்பை அடக்க முடியுமா? அப்படி அடக்க முடியாமல் சிரித்தால் நமக்குக் கொஞ்சம் நஞ்சம் இருக்கிற தைரியமும் போய்விடும்.

அதுவும் கற்றறிந்தவர்கள் உள்ள சபையில் போய் நின்றால், தூக்கு மேடையில் ஏறி நிற்பதுபோலத் தான் இருக்கும்.

''பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்.''

பொய்யா மொழிப் புலவர் வள்ளுவனார் வாக்குப் பொய்யாகுமா? போர்க்களத்தில் போய் நிற்பதென்றால்கூடப் பயப்படமாட்டார்களாம். ஆனால் கற்றோர் கூடிய அவையில் போய் நடுங்காமல் நிற்பவர்களைப் பார்ப்பது அரிது என்று அவர் கூறிவிட்டார்.

ஆகவே அவையைக் கண்டால் முதலில் அச்சமாகத்தான் இருக்கும். இந்த அச்சம் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் விலகும். ஆனால் சிறு வயதில் சபைக் கூச்சம் அவ்வளவாக இராது. கூச்சப்படத் தெரிகிற பருவம் அல்ல அது. கூச்சம் உள்ளவர்கள் எதிரே இருப்பவர்களை முதலில் மறந்துவிட வேண்டும். வீட்டிலே ஒருவர் இருவர் முன்னிலையில் இருப்பதாக எண்ணிக்கொள்ள வேண்டும். அவர்களிடம் சகஜமாகப் பேசுவதுபோல் பாவித்துக் கொண்டால் பேசுவது சுலபமாக இருக்கும். ஆனால் இது லேசில் நடக்கிற காரியம் அல்ல.

இந்த அச்சம் விலகினால்தான் நடுக்கம் மறையும். நடுக்கம் மறைந்தால்தான் பேச்சிலே கவ ம் பாயும். கவனம் ஏற்பட்டால் ன் பேசுகிற விஷயத்திலே கருத் ள் தென்படும்; என்ன சொல் றோம் என்று தெரியும்; அதை ப்படிச் சொல்கிறோம் அல்லது சொல்லலாம் என்பது பிடிபடும். பேச்சு நம் வசப்பட்டுப்போனால், பேசப் பேச இனிமை, நயம், வன்மை, தெளிவு, உணர்ச்சிப்பாடுகள் எல்லாம் அமைந்துவிடும்.

ஆகவே ஆரம்ப கட்டம்தான் மிக மிகச் சோதனையானது. சிறுவயதிலேயே பேசப் பழகுவதால் இந்தக் கட்டத்தை அனுபவிக்காமலே கடந்து விடலாம்.

ஆனால் பேச எண்ணுகிறவர்கள் கவனிக்க வேண்டிய சில விதிகளை இங்கே சுருக்கமாகப் பார்ப்போம். பேச்சு என்பது நேருக்கு நேர் சொல்லுகிற அழகான கதை போன்றதாகும். அதற்கு எடுப்பு உண்டு; நடு உண்டு; முடிவு உண்டு. ங்கே தொடங்கி, எதைச் சொல்லி விவரித்து, எப்படி முடிக்க வேண்டும் என்பதை நாம் முதலிலேயே அமைப்பாகச் சிந்தித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

‘‘பிள்ளையார் சதுர்த்தியும் அதுவுமா என்னைப் போய், பிள்ளையார் வாங்கிக் கொண்டு வரச் சொல்றியே? வெளியிலே பசங்க பார்த்துட்டா என்னை விடுவாங்களா?’’

நாம் பேசப்போகிற விஷயத்துக்கு ஏற்ற உவமைகள் சொல்லலாம். கிளைக் கதைகள் சொல்லலாம். ஆனால் அவை நாம் பேசுகிற விஷயத்துக்குப் பொருத்தமானவையாக இருக்க வேண்டும்.

ஹாஸ்ய எழுத்தாளர் ஒருவர் ஒரு கூட்டத்தில் பேசினார். நானும் மேடையில் இருந்தேன். இப்படித்தான் அவர் நடுவில் கதை ஒன்றைக் கூறினார். கதை வேடிக்கைக் கதைதான். ஆனால் சபையில் இருந்த ஒருவராவது அதைக் கேட்டுவிட்டுச் சிரிக்க வேண்டுமே! இல்லை; எல்லாரும் உம்மென்று தான் உட்கார்ந்திருந்தார்கள்.

‘‘ஏன்; ஒருவரும் சிரிக்கவில்லையா? சிரியுங்களேன்!’’ என்று கூட அந்த ஹாஸ்ய எழுத்தாளர் கேட்டுக் கொண்டார். அப்படியும் சபையில் துளிச் சலசலப்பு ஏற்படவில்லை. எழுத்தாளர் உடனே என்னைப் பரிதாபத்தோடு பார்க்கவே நான், ‘ஐயோ பாவம்!’ என்று

சிரித்து வைத்தேன்; நானும் சிரிக்காமல் இருந்தால் என்ன நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்? அவர் எல்லாரிடமும் கோபித்துக் கொண்டு போயிருப்பார். இதை நானாகச் சொல்லவில்லை. அவரே என்னிடம் தனியாக வந்து கூறியதைத்தான் சொல்கிறேன். யாரும் சிரிக்காமல், ரசிக்காமல் இருந்த காரணம் என்னவென்றால் அவர் பேசிய விஷயத்துக்கும் அந்தக் கதைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதுதான்.

பொருத்தமான கதையாகச் சொல்லிவிட்டு, நாமே சிரிக்கக் கூடாது. சபையோர் நாம் சொல்வதையும் சொல்லுகின்ற விதத்தையும் கேட்டு மகிழ்ச்சியோடு சிரிக்க வேண்டும். நாம் சிரித்தால் என்ன ஆகும் தெரியுமோ? சபையோர் வேடிக்கை பார்க்கும்படி ஆகிவிடும். நம்முடைய ஹாஸ்யமோ, உபமானமோ நம்மைப் பார்த்துச் சிரிக்கும்படி கேலிக்கூத்தாக இருக்கக் கூடாது.

நாம் பேசுவதைச் சபையோர் கருத்தோடு கேட்டுப் பின்பற்றுகிறார்களா என்பதைக் கவனித்துக் கொண்டேதான் நாம் பேச வேண்டும். அவர்கள் சுவாரஸ்யமின்றி இருப்பது தெரிந்தால் அவர்களுடைய உற்சாகத்தைத் தூண்டும் வகையில் நம்முடைய பேச்சைத் திருப்ப வேண்டும்.

முகத்தைக் கடுகடுப்பாக, கோபமாக வைத்துக்கொண்டு சிலர் பேசுவதை நாம் கண்டிருக்கிறோம். அவர்கள் பேச்சு தட்டுத் தடங்கல் இல்லாமல் நன்றாக இருந்தாலும் சபையில் எடுபடுவதில்லை. புன்முறுவலோடு கூடிய இன்முகமே கேட்பவர்களைக் கவர்கிறது. முகத்தைச் சரியாக வைத்துக்கொண்டு பேசப் பழகுவது நல்லது. நம் வீட்டில் தனியாக, கண்ணாடி முன் நின்று பழகிக் கொள்வதில்கூட அவமானம் ஒன்றுமில்லை.

ஒரு கட்சிக் கருத்தைக் கொண்ட கூட்டமானால் எதிர்த்தரப்பு வாதங்களை மிகைப்படுத்தாமல் எடுத்துக்கூறி, அதற்கு ஏற்ற பதில்களை வரிசையாக, வன்மையாகக் கூறப் பழகுதல் வேண்டும். சபையினரின் உணர்ச்சிகளை உணர்ந்து, மதித்து, நிதானமாக ஆனால் தடங்கலின்றிப் பேசுவது மிகவும் முக்கியம். யாருடைய மனமும் புண்படாதபடி பேசுதல் அதைவிட முக்கியம்.

எதையும் கஷ்டப்பட்டுச் சொல்ல முயன்றால், சொற்களைத் தேடிக் கொண்டு திகைத்தால், கேட்கிறவர்களும் கஷ்டப்படுவார்கள்; திகைப்பார்கள். சுகமாக, சரளமாகச் சொன்னால்தான் கேட்கிறவர்களுக்கும் இன்பமாகவும் உவப்பாகவும் இருக்கும்.

பேசுகிற எந்த விஷயமும் முதலில் நமக்குத் தெளிவாக இருக்க வேண்டியது அவசியம். அரைகுறையாக, நமக்கே சரிவரத் தெரியாத விஷயத்தைச் சொன்னால் அது நம்மைக் கேலிக்கு உள்ளாக்கிவிடும். விஷயம் தெரிந்தவர்கள் யாராவது இருந்து, நம் அரைகுறை ஞானத்தை அம்பலமாக்கி விடுவார்கள்.

பேசுகின்ற விஷயத்தைப் பு[illegible]ளிக் கணக்குகளாகவே பேசுவ[illegible]யும் கேள்விகளாகவே கேட்ப[illegible]யும் விலக்கவேண்டும். உணர்ச[illegible]வசப்பட்டு உங்கள் பேச்சைத் தடைப் படுத்தும்படி நேருவதையும் தவிர்க்க வேண்டும். சபையோர்களின் உணர்ச்சியை உருவாக்குவதற்கு, முதலில் நம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, அதைப் படிப் படியாகப் போஷித்துச் சொல்லிலே இழைத்துப் பேச வேண்டும்.

சபையினர் அலுத்துப்போகும் வரையில் பேசவும் முற்படக் கூடாது. நம்மைக் கைதட்டி உட்கார வைக்கவும் சபையோர் பின் வாங்கமாட்டார்கள்.

சபை அறிந்து, சபையின் முறையறிந்து, நோக்கமறிந்து, காலம் அறிந்து, முன் பின் பேச, நிகழ இருப்பவற்றை அனுசரித்து, நப[illegible] பேச்சைச் சீர் செய்துகொள்ள வேண்டும். சுருக்கமாக இருந்தால்

கண்ணன் பரிசுத் தொடர்கதை

சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நடைபெறும் தொடர் போட்டியைப்பற்றி முன்பே அறிவித்திருக்கிறோம். பலர் டுகோளுக்கிணங்க தொடர்கதை அனுப்ப வேண்டிய தேதியை ஒரு லம் தள்ளிப் போட்டிருப்பதைக் கவனிக்க வேண்டுகிறோம்.

னைகள்:—

1. சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.

2. காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் தெளிவாக இடம் டு எழுத வேண்டும்.

. கண்ணன் இதழில் 6 பக்கங்கள் விதம் 12 இதழ்களுக்கு மேல் மல் இருக்கவேண்டும்.

. தேர்ந்தெடுக்கப்படும் கதையைக் கண்ணனில் தொடர்ச்சியாக ரியிட்டு, புத்தகமாகவும் வெளியிடுவோம்.

5. குழந்தைகள், குழந்தை எழுத்தாளர்கள் அனைவரும் கலந்து ாள்ளலாம்.

6. முடிவுத் தேதி 31-9-'57.

—ஆசிரியர்.

பேனா நண்பர்கள்

(பெண்கள் மட்டும்)

1. குமாரி C. A. சாவித்திரி 36-D., ராஜா பஜார், புது டில்லி.

2. ,, N. S. சரோஜனி, 224. ராஸ்தாபேட், புனா-2.

3. ,, உமா மாலிக், 8/1, ரிக்ரியேஷன் கிளப் ரோடு, கி, புனா-2.

4. குமாரி O. ரேவதி, 161, தம்புச்செட்டித் தெரு. சென்னை-1.

5. ,, P. K. சங்கரி, 129, லலிதா நகர், சாந்தோம், ானை-4.

6. குமாரி A. சித்ரா. 15, தண்டபாணித் தெரு, தியாகராய ், சென்னை-17.

7. குமாரி K. லட்சுமி, 71, சின்னக் கடைத்தெரு, திருவண்ணாமலை . ஆ.)

8. குமாரி S. கௌரி, கலைமகள் கல்வி நிலையம், பெண்கள் உயர் லைப் பள்ளி, ஈரோடு.

9. குமாரி அறிவுக்கொடி, 38, கோர்ட்டு வீதி, ஈரோடு.

10. குமாரி M. A. சகீனா, 15, அண்ணாஜி ராவ் தெரு, ஈரோடு.

11. ,, G. சௌந்தரி., A. கோமதிபாய்., 54. SV. P. N. S. தெரு, விருதுநகர்.

ஆண்கள்

12. P. ராமமூர்த்தி, C/o V. G. சர்மா, M.Sc 917, 2A, கணேஷ்வாடி டெக்கான்-ஜிம்கானா, புனா-4.

13. V. நரசிம்மன், 14, குளக்கரைத் தெரு, வில்லிவாக்கம், சென்னை.

14. K. சுந்தரேசன், 27 A., தெற்கு மாடவீதி, நல்லூர்ப்பேட்டை, டியாத்தம், வ. ஆ. ஜில்லா.

15. P. பெரியசாமி, பாசுதயன்பாளையம், நாமகிரிப்பேட்டை ஸ்டு, சேலம் ஜில்லா.

16. S. சுப்பிரமணியன், 105-11. பழைய அக்கிரகாரத் தெரு, ம், மதுரை ஜில்லா.

(Regd. as Newspaper in Ceylon.) **Reg. No.**

கண்ணன்

புதிய நாணய விகிதப்படி
கண்ணன் வெளியீடுகள்

ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையில் உ
களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் உ
இதோ அந்தப் பட்டியல்:—

			ரூ. நயா. பைசா
1	வீடர் மணி - ஆர்வி	..	1.50
2.	சந்திரகிரிக் கோட்டை - ஜனு	..	1.25
3.	அசட்டுப் பிச்சு - ஆர்வி	..	1.00
4.	சின்ன ராஜா - வாசகன்	..	0.75
5.	பவழவல்லி - கி. ரா.	..	0.75
6.	விளையும் பயிர் - கி. வா. ஜ.	..	0.50
7.	சமர்த்து மைனு - தி. ஜ. ர.	..	0.50
8.	அபாயச் சங்கு - நீலம்	..	0.5
9.	ஜக்கு - ஆர்வி	..	0.5
10.	ஜம்பு - ஆர்வி	..	0.5
11.	ஏரிக்கரை மாளிகை - ஜனு	..	0.50
12.	மின்னல் அரக்கன் - ஜனு	..	0.5
13.	ராஜாவும் குருவியும் - 'சோமசன்மா'	..	0.50
14.	கழுகும் கிளியும் - 'சோமசன்மா'	..	0.50
15.	தவளையும் காளையும் - 'சோமசன்மா'	..	0.50
16.	விஞ்ஞானம் பேசுகிறுர் - பெ. நா. அ.	..	0.50
17.	பாரஸீக ரோஜா - ஆர்வி: ஸாமி	..	0.32
18.	தூங்கும் அழகி - ஆர்வி: ஸாமி	..	0.25
19.	குளிகைத் தீவு - ஆர்வி: சங்கர்	..	0.25
20.	மாஸ்டர் பாலகுமார் - ஆர்வி: ஸாமி	..	0.25
21.	நீச்சல் பழக்கம் - டிமான்ஸ்டிரேட்டர்	..	0.20
22.	பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் - எஸ். ஜே.	..	0.20
23.	கோழி விதைத்த நெல் - சூடாமணி	..	0.20
24.	தங்கத்தின் பந்து - சூடாமணி	..	0.20
25.	என் பேர் என்ன? - சூடாமணி	..	0.20
26.	கவிஞர் கதை - கி. வா. ஜ.	..	0.62
27.	தங்க மாம்பழம் - ராஜி (அச்சில்)	..	
28.	புலிக் குட்டி - ஆர்வி: ஸாமி (அச்சில்)	..	

சந்தாதாரர்களுக்குக் கமிஷன் உண்டு

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை